பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 13 புதன்கிழமை (26.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 121


## தமிழர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளான

# புலிகளின் பங்களிப்பு இல்லாமல் பிரச்சினைக்குத் தீர்வு கிடையாது

### தெ.ஆபிரிக்க பிரதி அமைச்சர் லண்டனில் கருத்து

லண்டன்,மார்ச்26



**இலங்கைத் தமிழர்கள் தங்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளாக தமிழீழ விடுதலைப் புலிகளையே கருதுகின்றார்கள். அவர்களின் பங்களிப்பு இல்லாமல் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது சாத்தியமில்லை.**

**தென்னாபிரிக்காவின் பிரதித் தொடர்பாடல் அமைச்சர் இராதாகிருஷ்ண படையாச்சி லண்டனில் வைத்து இவ்வாறு கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.**

லண்டனில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இடம்பெற்ற - 'பூகோள சமாதான ஆதரவு' அமைப்பின் கருத்தரங்கிற்கு இடையே செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த வார இறுதியில் கிழக்கு லண்டன் பல்கலைக்கழகத்தில் 'இலங்கையின் இனப்பிரச்சினை' எனும் தலைப்பிலான அனைத்துலக மாநாட்டில் தென்னாபிரிக்கா சார்பில் படையாச்சி கலந்துகொண்டார்.

அந்த மாநாடு குறித்து அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

இலங்கை அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலி ளையும் பேச்சு மேசைக் குத் திரும்ப வப்பதை நோக்கமாகக் கொண்ட இம்மாநாடு, இலங்கை தொடர்பான அனைத்துலகத்தின் கவனத்தைத் திருப்புவதற்கான ஒரு படிக்கல்லாகும்.

அனைத்துலக சமூகம், அனைத்துலக அமைப்புகள், தொண்டர் அமைப்புகள் என்பன இரு தரப்புகளையும் பேச்சு மேசைக் குத் திரும்ப வைப்பதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்று இம்மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு தென்னாபிரிக்க சகல உதவிகளையும் வழங்கும். எனினும் தென்னாபிரிக்கா ஒருபோதும் தமது பங்களிப்பை இப்பிரச்சினையில் வலிந்து திணிக்காது.

**தமிழர்களின் பிரச்சினைக்காக தென்னாபிரிக்கா தீர்வில் சிரத்தை**

இலங்கையில் மோதல்கள் தீவிரமடைவது குறித்து தென்னாபிரிக்கா ஆழ்ந்த கவலை

(12ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல் சேவை இன்று இல்லை

யாழ்ப்பாணம்,மார்ச்26

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை இன்று புதன்கிழமை இடம்பெறாது என்றும் நாளை வழமை போல் சேவை இடம் பெறும் என்றும் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் இன்று புதன்கிழமை பிரயாணத்தினை மேற்கொள்வதற்கு அனுமதிச் சீட்டினை பெற்றுக் கொண்டவர்கள் நாளை வியாழக்கிழமையும் 28.03.2008, 30.03.2008, 01.04.2008 ஆகிய திகதிகளில் பிரயாணத்தினை மேற்

(12ஆம் பக்கம் பார்க்க)

## உணவை ஓர் ஆயுதமாக பயன்படுத்துகிறது அரசு!

### தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, மார்ச்.26

தமிழ் மக்களை அடக்கி ஆள்வதற்கான ஆயுதமாக உணவை இலங்கை அரசு பயன்படுத்தி வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் விடுதலைப் புலிகள் அமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பிரித்தானியாவிடம் இருந்து அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட சிங்கள அரசுகள் தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் இராணுவச் சோதனைச் சாவடிகளை அமைத்தே தமிழ் மக்களை அடக்கி ஆண்டு வருகின்றன.

தமது உரிமைகளுக்காகத் தமிழ் மக்கள் குரல் கொடுக்க ஆரம்பித்ததும் சிங்களப் படையினரின் இந்தச் சோதனைச் சாவடிகள் அதிகரித்துள்ளன. இது தமிழ் மக்களின் மனித நேயத்தின் மீதான தொடர்ச்சியான அச்சுறுத்தலாகும். இச்சோதனைச் சாவடிகளில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## போர் உக்கிரமடைவதால் இளையவர்கள் தப்பிச் செல்ல வேண்டிய கட்டாயம் உண்டு

### மனிதக் கடத்தலுக்கும் ஏது உண்டென்கிறது ஐ.நா.

ஜெனிவா,மார்ச்26

இலங்கையில் போர் மீண்டும் உக்கிரமடைந்து வருகிறது. அதனால் இளையவர்கள் அங்கிருந்து தப்பிச் செல்வதற்கான கட்டாய சூழ்நிலை உருவாகி வருகிறது.

வெளிநாடுகளுக்குத் தப்பிச்சென்று குடியேற முயற்சிப்பது களவாக மனித கடத்தலுக்கும் ஏது நிலையை உண்டாக்குகின்றது.

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் போதைவஸ்து மற்றும் குற்றச்செயல்கள் பிரதிநிதி கரி லூயிஸ் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்கள் மிக நீண்ட காலமாக அதாவது 1983ஆம் ஆண்டிலிருந்தே இடம்பெற்று வரும் போரினால் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறி வருகின்றனர். இந்தப் போர்ச் சூழல் தொடர்வதால் அங்கிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்வதற்கு மக்கள் முயற்சித்து வரு கின்றனர். இதனால் திருட்டுத்தனமாக வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதற்கு உதவும் முகவர்களின் செயற்பாடுகள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சுகின்றோம்.

சுமார் 20 மில்லியன் சனத்தொகை கொண்ட இலங்கை மனிதக் கடத்தல்கள் விடயத்தில் ஆசியாவில் மிகக்குறைந்த குற்றங்களையே பதிவு செய்திருக்கின்றது. இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான் என்பன முறையே மிக அதிக வெளி

(12ஆம் பக்கம் பார்க்க)

### முஸ்லிம் கட்சிகள் ஒரே அணியில் போட்டியிடும் முயற்சி தோல்வியில்!

கொழும்பு ,மார்ச்.26

கிழக்குமாகாணசபை தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் இணைந்து ஒரே அணியாகப் பொதுப்பட்டியலில் வேட்புமனுக்கள் செய் யும்முயற்சி தோல்வியில் முடிந்தது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அரசில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் கட்சிகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் திங்கட்கிழமை இரவு சந்தித்து தேர்தலில் ஒரே அணியாக போட்டியிடுவது தொடர்பாக ஆராய்ந்தனர்.

பள்ளிவாசல் சம்மேளத்தின் அழைப்பின் பெயரில் இடம்பெற்ற இச்சந்திப்பில் மக்கள் பிரதி நிதித்துவப்படுத்தும் கட்சிகள் ஓரணியாய் போட்டியிட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரச அணியுடன் கூட்டுச்சேர பிள்ளையான் குழு நிபந்தனை

மட்டக்களப்பு,மார்ச்26

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமது கட்சியுடன் அரசாங்க அணி பொது இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று பிள்ளையான் குழு நிபந்தனை விதித்துள்ளது.

இது தொடர்பாக கட்சியின் அரசியல் குழு நேற்றுக் கூடி முடிவு செய்துள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தமது கட்சி நியமிக்கும் ஒருவரை முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட அரசு இணங்கினால் மட்டுமே அதனுடன் கூட்டுச் சேர முடியும் என்று கட்சியின் அரசியல் குழு முடிவு செய்துள்ளதாகவும் பேச்சாளர் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண சபைக்கு ஐ.தே.க. தனித்துப் போட்டி

கொழும்பு,மார்ச்26

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தக் கட்சியுடனும் கூட்டுச் சேராமல் தனித்துப் போட்டியிட ஐ.தே.க.கட்சி நேற்று முடிவு செய்துள்ளது.

நேற்றுக் கூடிய கட்சியின் செயற்குழு இதற்கான முடிவை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தனா தலைமையிலான குழு ஒன்று கிழக்குக்குச் சென்றுள்ளது.

(அ-1)




## சேவைநலன் பாராட்டு



உயர்திரு

### தாமோதரம்பிள்ளை மகாதேவன்

34 வருட ஆசிரிய சேவையில் 20 வருடங்கள் எமது கல்லூரியில் கணித ஆசிரியராகக் கடமையாற்றி 25.03.2008 இலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியர் திரு.தா.மகாதேவன் அவர்கள் 1997 - 2007 வரை தொடர்ந்து 10 வருடங்களாக பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளராய் இருந்து பௌதீக வள அபிவிருத்திக்கு மாபெரும் சேவையாற்றியமைக்காகவும் கணிதத்தில் விருப்புடனே கற்கவைத்து நன்மாணாக்கரை உருவாக்கியமைக்காகவும் பாராட்டுகின்றோம்.

எல்லாம் வல்ல இறைவனின் ஆசி அவருடனும் அவர் குடும்பத்துடனும் கூட இருப்பதாக.

யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி
வல்வெட்டித்துறை. (சி/551983)

பாடசாலை
அபிவிருத்திச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



### மகேந்திரன் தயாபரன்

( நல்லூர் பிரதேச செயலக கோண்டாவில் கிழக்கு/ மத்தி, குமரகோட்டம் கிராம அலுவலர் (J/118))

அன்புடனும் பண்புடனும் சேவையாற்றி குமர கோட்டம் வாழ் மக்களின் மனதைப் பறித்து கிராம அலுவலர் சேவைக்கு இலக்கணமாகத் திகழ்ந்த மகேந்திரன் தயாபரன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு ஆறாத துயரில் ஆழ்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குமரகோட்டம் ஞானவைரவர் ஆலய பரிபலான சபையினர்,
குமரகோட்டம் சனசமூக நிலைய நிர்வாக சபையினர்,
குமரகோட்டம் வாழ் மக்கள்,

(72450)

## ஆறாம் ஆண்டு நினைவுப் பூக்கள்



### அமரர் கந்தையா இராசலிங்கம்

மலர்வு
05.04.1934

உதிர்வு
02.04.2002

திதி: 26.03.2008

ஆறாண்டு சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
மீளாத் துயில் கொண்டு
மீளவில்லை இன்னும் இவ்வுலகில்
நாளை நீ வருவாய் எம்மத்தியில் என
நாமிருப்போம் அவனியிலே.

இந்நாளில் உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

குடும்பத்தினர்.

*லிங்கம் ஸ்ரோர்ஸ்,*
*நாச்சிமார் கோவிலடி,*
*இல 14, காரைக்காட்டு லேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (72444)

## கலைப்பீட நேர்முகப் பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்26

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தினரால், விரிவுரையாளர்கள் மற்றும் உதவி விரிவுரையாளர்களுக்கு நாளையும் நாளை மறுதினமும் (27, 28 ஆம் திகதிகளில்) நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சைகள், தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நேர்முகப் பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 3 ஆம், 4ஆம் திகதிகளில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

## சேவல் தாக்கி வயோதிப மாது காயம்

யாழ்ப்பாணம்,மார்ச்26

சேவல் பாய்ந்து தாக்கியதில் வயோதிபப் பெண் வீழ்ந்து காயமடைந்தார். இச்சம்பவம் நேற்று மந்துவிலில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த ச.சின்னப்பிள்ளை(வயது 73) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தமது வளர்ப்புக் கோழியை முட்டைக்கு அடைப்பதற்கு பிடித்தபோதே சேவல் பாய்ந்து தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. அப்பெண் நிலைகுலைந்து வீழ்ந்ததில் காயமுற்றார். (1-207)

## வானொலி, தொலைக்காட்சி பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்26

தென்மரட்சி பிரதேசத்தை சேர்ந்த வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 25 இளைஞர், யுவதிகளுக்கான வனொலி, தொலைக்காட்சி பயிற்சி நெறிகள் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

கனேடிய உலக பல்கலைக்கழக சேவை நிறுவனமும் அறவழி போராட்டக் குழுவினரும் இணைந்து கைதடி நுணாவிலில் உள்ள அறவழி தொழில் பயிற்சியகத்தில் நடத்தவுள்ள பயிற்சிநெறியினை அறவழி போராட்டக் குழுவின் தலைவர் வ.ஸ்ரீ சக்திவேல் ஆரம்பித்துவைப்பார்.

பயிற்சிநெறிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அறவழி நிலையத்தினால் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (1-207)

## நிதி, நிர்வாக செயலமர்வு

யாழ்ப்பாணம்,மார்ச்26

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான நிதி, நிர்வாகம் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் செயலமர்வு நடத்தப்படுவதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (1-207)

## கடத்தப்பட்ட ஓட்டோச் சாரதி விடுவிக்கப்பட்டார்

கொழும்பு,மார்ச்26

கொழும்பு, வெள்ளவத்தைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்ட ஓட்டோச் சாரதியான எட்வேர்ட் பிரேமானந்த் (வயது - 27) என்பவர் நேற்றுமுன்தினம் இரவு களுபோவில வைத்தியசாலைக்கு அருகில் வைத்து விடுவிக்கப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

வெள்ளவத்தைக் கடற்கரைப் பகுதியில் ஓட்டோ அநாதரவாகக் கிடக்க, அதனைச் செலுத்தி வந்த சாரதி மர்மமான முறையில் காணாமற் போனார் எனச் செய்திகள் முன்னர் வெளியாகியிருந்தமை தெரிந்ததே. கடத்திச் செல்லப்பட்ட இவர் வீடு ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என்று வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

விடுவிக்கப்பட்ட இந்த இளைஞர் களுபோவில வைத்தியசாலையில் தற்போது சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## தவறிவிட்டது

சபாரட்ணம் ஏகேந்திரனின் (613003576V) இலக்கமுடைய தே.அ.அட்டை நேற்று நண்பகல் அளவில் கந்தர்மடம் சந்தி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி ஆகிய இடங்களில் பயணம் செய்தபோது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 163, ஸ்ரான்லி வீதியில் உள்ள யசோ மோட்டோர்ஸ் நிறுவனத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். *தொடர்பு:* 021 222 9482 (b)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் கந்தப்பு

(பூமா புடைவை நிறுவன உரிமையாளர்)

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் சாமியன் அரசடியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கந்தப்பு நேற்று (25.03.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சிவகாமி, திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஐயம்பிள்ளை - பாருபதி தம்பதியினரின் மருமகனும் பாக்கியம்(கரவெட்டி), கருணாநிதி (B.Com-லண்டன்), அன்பழகன்(கனடா), மணியம்மை (ஆஸ்திரேலியா), ஆர்த்தி(கொழும்பு), புனிதவதி(கொம்பியூட்டர்-கனடா), பாலவேந்தன்(பொறியியலாளர்-கனடா), வாணி (B.Com - லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குமாரசாமி(வலம்புரி ரெக்ஸ்ரைல், கரவெட்டி), மங்களம் (லண்டன்), யோகேஸ்வரி(கனடா), சற்குணராசா(பொறியியலாளர்-கனடா), இரவீந்திரன்(பொறியியலாளர்- கொழும்பு), ஸ்ரீதரன் (கொம்பியூட்டர் - கனடா), நளினி(பொறியியலாளர்- கனடா), தமிழ்ஞானம்(B.Com - வர்த்தகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2008) புதன் கிழமை அன்னாரின் இல்லத்தில் மு.ப 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக சோனாப்பு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சாமியன் அரசடி,*
*கரவெட்டி.* (55198)

தகவல்:
குமாரசாமி (மருமகன்)

### திருமதி செல்வரத்தினம் கணேசன்



சண்டிலிப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் கணேசன் நேற்று (24.03.2008) சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பபி(Bubby) என அழைக்கப்பட்ட ஆறுமுகம் கணேசன் அவர்களின் அன்பு மனைவியும், விக்கி என அழைக்கப்படும் விக்னேசன் (கிட்சுடா நிறுவனம் - கொழும்பு), அசோக்குமார் (ஐக்கிய நாடுகள் சபை- நியூயோர்க்), சுகுமார் (கனகாம்பிகை நகைமாளிகை, சுக்ஷி குரூப் - கனடா), சிவநேசன் (சிகாரா டிரேடிங் - கனடா), திருமதி ரஜினி சத்தியவான் (ஆஸ்திரேலியா), திருமதி சுலோசனா மகேசன் (ஆஸ்திரேலியா), சூட்டா என அழைக்கப்படும் சுரேஸ் (Joe Alfredos - கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுகிர்தம் (ஆஸ்திரேலியா), கிறிஸ்ரீன் (நியூயோர்க்), ஷீலா (கனடா), சத்தியவான் (ஆஸ்திரேலியா), றோய் மகேசன் (ஆஸ்திரேலியா), சித்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜோனத்தன், ஜோர்ஜ், சேரா, சஞ்சே, சோபி, கஜன், ரஜீவ், லாவண்யா, வித்தியா, றிபேக்கா, சுதேவ், சுஜீத்தா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் காலஞ்சென்றவர்களான அன்னரத்தினம், பத்மநாதன், அருணாசலம், சரவணமுத்து மற்றும் யோகரத்தினம் (கனடா), ரெங்கநாதன் (கண்டி), சோமசுந்தரம் (கொழும்பு), சரோஜினி தேவி (கொழும்பு), கனகசுந்தரம் (கொழும்பு), கமலாதேவி (யாழ்ப்பாணம்), ராசதுரை (அசோசியேட் மார்க்கட்டிங், கொழும்பு), ஜெயதேவி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான மகாதேவா, மகேசன் (சட்டத்தரணி), மயில்வாகனம் (டி.ஐ.ஜி), மகேந்திரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 3280, Sheppard Avenue East இல் அமைந்துள்ள High Land Funeral Home இல் உற்றார், உறவினர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (26.03.2008) புதன்கிழமை நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(a)

தகவல்:
விக்கி (மகன்)
+ 16472996915
+ 14164920946

### மகேந்திரம் தயாபரன்

(கிராம அலுவலர், கோண்டாவில் J/ 118)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மகேந்திரம் தயாபரன் (கிராம அலுவலர், கோண்டாவில் J/118) நேற்று (25.03.2008) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும் விஷ்ணுப்பிரியா, (G.A.Q. மாணவி), மயூரதன் (பழைய மாணவன், யாழ் இந்துக் கல்லூரி உயிரியல் 2006 பிரிவு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ் சென்ற சு.மகேந்திரம் -திரவியம் அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்ற க.சுப்பிரமணியம் - பொன்னம்மா ஆகியோரின் மருமகனும், திருமதி இ.ஜெயந்தி, ம.இரவீந்திரன் (ஜேர்மனி), ஸ்ரீசுகந்தி (லண்டன்), ப.ஆனந்தி (பிரான்ஸ்), ம.பகீரதன், ம.சுதாகரன் (லண்டன்), பா.மாலதி, க.துஷ்யந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சு.செல்வேந்திரன் (இலங்கை வங்கி, கொழும்பு), சு.மகேந்திரன் (பிரதேச செயலகம், கோப்பாய்), சு.இராசேந்திரம் (சுன்னாகம்), சு.குலேந்திரன் (கோப்பாய்), சு.செல்வமணி, சு.கணேஸ்வரி (லண்டன்), சு.பிரமேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2008) புதன் கிழமை பிற்பகல் 1 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சோனெழு,*
*கோப்பாய் மத்தி.* (சி/551988)

தகவல்:
குடும்பத்தினர்.

# முகாமைத்துவ உதவியாளர்களுக்கு திருகோணமலையிலேயே நியமனம்

## அதற்கான ஆயத்தங்களுடன் வருமாறு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.26

அரச முகாமைத்துவ உதவியாளர் தரம்III இற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கென வடக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சு நடத்திய நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட 101 பேருக்கும் திருகோணமலையிலேயே நியமனம் வழங்கப்படவுள்ளது.

எனவே தெரிவானவர்களை அதற்கான ஆயத்தங்களுடன் செல்ல வேண்டும் என்று மாகாண சபையின் பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

அங்கு கடமையாற்ற விரும்புவோரை மட்டும் ஆயத்தங்களுடன் செல்லுமாறும் மாற்றம் எதுவும் வழங்கப்படமாட்டாது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நியமனங்களை ஏற்க விரும்பாதவர்களின் இடங்களுக்கு பட்டியலில் உள்ள ஏனையோர் நியமிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான பயண ஒழுங்குகளை யாழ். செயலகம் மேற்கொள்ளும் எனவும் கூறப்பட்டுள்ளது. (203)

# சற்று வெய்யிலைக் கண்டவுடன் புகையிலை வெட்டிக் காயவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.26


கடந்த சில வாரங்களாக குடாநாட்டில் பெய்து வந்த மழை சற்று ஓய்ந்த கையோடு விவசாயிகள் புகையிலைகளை வெட்டி அவசர அவசரமாக வெய்யிலில் காயவிட்டு வருகின்றனர்.

கடந்த வாரங்களில் பெய்த மழையால் செய்கை பண்ணப்பட்டிருந்த புகையிலைக் கன்றுகள் சோர்ந்து போய்க் காணப்பட்டிருந்தன.

புகையிலை வெட்டப்படும் பருவத்தில் இவ்வாறு அவை சோர்ந்து போயிருந்தமையாலும் மழை தொடர்ந்து பெய்த வண்ணம் இருந்ததாலும் விவசாயிகள் பெரும் கவலை அடைந்து இருந்தனர்.

தற்போது மழை குறைந்துள்ள நிலையில் வெய்யில் ஓரளவு எறிக்கத் தொடங்கியுள்ளது.

இதனையடுத்து புகையிலைச் செய்கையாளர்கள் அவற்றை வெட்டிக் காய



விட்டு வருகின்றனர்.

இருந்தபோதும் இனிமேலும் மழை பெய்யுமானால் காயவிட்ட புகையிலைகள் நாசமாகிப் போகும் என்றும் இதனால் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்படும் எனவும் விவசாயிகள் அச்சம் தெரிவித்துள்ளனர். (203-86)

# மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களின் விவரம்; தென்மராட்சிப் பிரதேச செயலகம் சேகரிக்கிறது

யாழ்ப்பாணம், மார்ச்.26

அண்மையில் பெய்த கடும் மழையினால் பாதிக்கப்பட்ட விளை பயிர்களின் விவரங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் திரட்டப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் வரை 13 கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து கிடைத்த அறிக்கையின் பிரகாரம் 25 லட்சம் ரூபா பெறுமதியான விளைபயிர்கள் வெள்ளத்தினால் அழிந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தத்தமது விவசாய சம்மேளனம் ஊடாகக் கிராம அலுவலருக்கு சேதத்தை அறிவிக்குமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். இதுவரை அழிவடைந்த நெற்பயிர்கள் உட்பட மரக்கறிப் பயிர்களின் விவரங்கள் திரட்டப்படுகின்றன.

இதுவரை கல்வயல், மட்டுவில், நுணாவில்மத்தி, நுணாவில் மேற்கு, மட்டுவில்-நுணாவில், மட்டுவில் மத்தி, மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், கரம்பைக் குறிச்சி, வரணி-இயற்றாலை, கொடிகாமம் தெற்கு, அல்லாரை ஆகிய பிரிவுகளில் இருந்து சேத விவர அறிக்கை கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207)




# குடாநாட்டில் மரக்கறி விலைகள் நாளாந்தம் உயர்ந்து வருகின்றன

யாழ்ப்பாணம், மார்ச்.26

குடாநாட்டின் மரக்கறிச் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் நாளாந்தம் உயர்வடைந்து காணப்படுகின்றன.

அண்மைக்காலமாகப் பெய்த மழையை அடுத்து விவசாய நிலங்களில் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் நாசமடைந்ததுடன் வளர்ந்த பயிர்களின் பூக்கள், காய்கள் என்பன வாடி வீழ்ந்தன.

இதனால் மரக்கறிச் செய்கையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்துச் சந்தைக்கு வரும் மரக்கறிகளின் அளவு மிகவும் குறைவாகவே காணப்படுகிறது என்றார்.

மரக்கறிச் செய்கையில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சியே அவற்றின் விலை உயர்வுக்குக் காரணம் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகளுக்குப் பல லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கத்தரிக்காய் 120 ரூபாவாகவும், தக்காளி 100 ரூபாவாகவும், முருங்கைக்காய் 400 ரூபா வாகவும், உள்ளூர் உருளைக்கிழங்கு 120 ரூபா வாகவும், வெங்காயம் 80 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

இதேவேளை ஒரு சில மரக்கறிகளின் விலைகள் குறைவாக உள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது. (203- 302)

# ரசனை மிக்க ஊடகக்கல்வி மேம்படுத்தப்பட்டு பல்கலைக்கழகம் வரை கொண்டு செல்லத் திட்டம்

## துணைவேந்தர் பேராசிரியர் சண்முகலிங்கன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 26

நீதியானதும், ரசனையின் வழியானதுமான ஊடகக்கல்வியை மென்மேலும் மேம்படுத்தி பல்கலைக்கழக மட்டம் வரை வளர்த்திடுவதற்கான செயற்திட்டங்கள்வகுக்கப்படுகின்றன.



இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன்.

ஊடகவள நிலைய டிப்ளோமா கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

அதில் கலந்து கொண்டு வாழ்த்துரை ஆற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். ஊடக வழங்கள் பயிற்சி நிலையத்தில் இதழியல் டிப்ளோமா முழு நேரக் கற்கை நெறியின் இரண்டாவது அணியினருக்கான கற்கை நெறி ஆரம்ப விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

பயிற்ச்சி இணைப்பாளர்அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை தலைமையில்நடைபெற்ற இந் நிகழ்வில் துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

எங்களது அறிவு, மனவெழுச்சி, ரசனை என அனைத்து முகங்களிலும் ஊடகங்க ளின் செல்வாக்கு இன்று மேலோங்கியுள் ளது. நவீன உலகைப் புரிந்துகொண்டு அதில் வினைத்திறனான வாழ்வைக் காண் பதில் ஊடகங்களின் துணை இன்றியமையாதது.,

நவீன அறிவியலின் வளர்ச்சியுடன் ஊடகவியலிலும் பாரிய மாற்றங்கள்நிகழ்ந்துள்ளன. குறிப்பாக செய்மதி, இலத்திரனி யல் புரட்சியின் விளைவாக தகவல் தொடர் பியலிலும் எல்லையயில்லா மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பமும், தொடர்பியலிலும் இன்றியமையாத சமூக அறிவியல்களாய் இன்று பரிமாணம் பெற்றுள்ளமையும் கவனதிற்குரியது. மேலை நாடுகள் பலவற்றிலும் பல மாணவர்களை ஈர்க்கின்ற கல்விப் புலமாக ஊடககல்வி இடம் பிடித்துள்ளது. எங்கள் புலங்களில் இப்பொழுதுதான் இந்தத் துறைசார்ந்த ஆர்வமும் கல்வியும் முளைவிட்டுள்ளது.

எங்கள் ஊடகக் கல்வி நிலையத்தில் இன்று அங்குரார்ப்பணமாகும் கல்வி நெறிகளின் முக்கியத்துவமும் மேற் குறித்த பின்னணியில்தான் செயல் வடிவம் பெறுகின்றன.

* ஊடகவியல் சார்ந்த அத்தனை வல்லமைகளையும் எங்கள் வசமாக்குதல்;
* ஊடக அறிவுகொண்ட சமூகமாக எங்கள் மக்களுக்கான அறிவு வெளிச்சத்தைத் தருதல்

என இருபிரதான இலக்குகளுடன் இந்தக் கற்கை நெறிக்ளும் பயிற்சிகளும் திட்டமிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

ஒரு காலத்தில் ஒரு சமூகத்தின் முன்பாட்டினை அளப்பதற்கான குறிகாட்டியாக எழுத்தறிவு பயன்பட்டது; இன்று மேலதிகமாக ஊடக அறிவு பற்றிய மதிப்பீடும் வேண்டப்படுகின்றது.

எங்களுக்கு வேண்டிய நலமான ஊடக பண்பாட்டினைக் கட்டியமைத்தல் என்ற காலக்கடமையின் பயனாளிகளாய் இந்த பயிற்சி நெறியில் பயில வந்துள்ளவர்களின் கல்வியும் எதிர்காலமும் சிறந்திட வாழ்த்துகின்றேன்.

இந்தக் கல்வி வழி உங்கள் தொடர்பியல் வல்லமைகளும், ரசனையும் மேம்பட வேண்டும்; அதன் வழி எங்கள் சமூகத்தின் ஊடக அறிவும் அதன் வழியான ரசனையும் மேம்பட வேண்டும். இன்று நாம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளினதும் அடிநாதமாக எங்களது மதிபீட்டுகளும் ரசனையும் உள்ளமையை உணர்வீர்கள்.

நீதியான அழகான நாளை என்பது எங்களது மேம்பட்ட ரசனையின் வழியானது. இந்த நல்ல ரசனையை வளர்க்கும், படைக்கும் ஊடக கல்வியை மென்மேலும் மேம்படுத்தி பல்கலைக்கழக பட்டநிலைவரை வளர்த்திடுவதற்கான செயற்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

உலக நாடுகளில் பாடசாலை மட்டக் கலைத் திட்டத்திற்குரிய ஊடக அறிவு கிட்டத் தட்ட 40 இற்கும் அதிகமான நாடுகளில் இடம்பிடித்துள்ளது.

எங்களது நாட்டிலும் இனியும் தாமதமின்றி இந்த அறிவினைப் பரவலாக்குதல் இன்றியமையாதது என்றார். (203)

# நெடுந்தீவின் குடியிருப்பற்ற வீடுகளில் கதவுகளும் கூரை ஓடுகளும் திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 26

நெடுந்தீவின் குடியிருப்புகளற்ற வீடுகளில் கூரை ஓடுகள், கதவுகள் என்பன திருட்டுப் போவதாக வீட்டு உரிமையாளர்கள் முறையிடுகின்றனர்.

ஊரடங்குச் சட்டத்தையும் இரவு வேளையையும் பயன்படுத்தி இந்தத் திருட்டை நடத்திவருவதாகவும், இதனால் அநேக வீடுகள் கூரைகளின்றிக் காணப்படுவதாகவும் திருட்டு இடம்பெற்ற வீட்டு உரிமையாளர்கள் விசனப்படுகின்றனர்.

தற்போது மூடப்பட்டுள்ள செல்லம்மா வித்தியாசாலையின் கூரை ஓடுகளும் அண்மையில் திருடப்பட்டுள்ளன. (202-111)

# மண்டைதீவுப் பகுதியில் கால்நடைகள் தொல்லை

யாழ்ப்பாணம்,மார்ச் 26

மண்டைதீவுக் கிராமத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலங்களைக் கால்நடைகள் அழித்து வருவதாக விவசாயிகள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டாக்காலி மாடுகள் மட்டுமன்றி வளர்ப்பு மிருகங்களும் வேலிகளையும் தடுப்புகளையும் கடந்து புகையிலைத் தோட்டங்களை நாசப்படுத்துவதாக அந்தப் பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கால்நடை வளர்ப்போர் தற்பொழுது பயிரிடும் காலத்திலும் கூட அவற்றை கட்டி வளர்ப்பதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (203-302)



மல்லாகம் மத்தி மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மகளிர்தின நிகழ்வில் முன்னாள் வலி வடக்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் மங்கள விளக்கேற்றி மகளிர் தின நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை முதலாவது படத்திலும் வலி வடக்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ந.ரதி சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். படங்கள்:நேசன்

# திருமண வாழ்த்து



இன்று (26.03.2008) புதன்கிழமை திருமண பந்தத்தில் இணையும் புத்தூர் மேற்கு, நவகிரியைச் சேர்ந்த **கவிக்குமார்** அவர்களையும் கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவிலைச் சேர்ந்த **சுகிர்தா** அவர்களையும் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

தகவல்:
ப.மயூரதன் (தம்பி)

கொழும்பு. (72439)

# பொன்விழா

## திருமண வாழ்வின் ஐம்பதாம் ஆண்டு நிறைவு

## 26.03.2008



மயிலணி, சுன்னாகத்தைச் சேர்ந்த

## திரு.மயில்வாகனம் சத்தியபாலன்

## திருமதி சத்தியபாலன் கமலாதேவி

தம்பதிகள் இல்லறத்தில் இணைந்து ஐம்பதாவது ஆண்டு திருமண நிறைவைக் காணும் இந்த நன்நாளில் சகல சௌபாக்கியங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

மயிலணி,
சுன்னாகம். (72425)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

வழிகாட்டல் நிகழ்வு (Orientation Programme) - 2008

1. வணிக முதற் தேர்வு
2. வணிகமாணி பகுதி - I
3. வணிகமாணி பகுதி - II
4. வணிகமாணி பகுதி - III

மேற்படி வணிக முதற்தேர்வு மற்றும் வணிகமாணி பகுதி -I, II, III பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்காக 29.03.2008 தொடக்கம் 10.05.2008 வரை வழிகாட்டல் நிகழ்வொன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக பீடத்துறை விரிவுரை மண்டபத்தில் பின்வரும் நேர அட்டவணைகளின்படி இடம்பெறவுள்ளது. மேற்படி பரீட்சைகளுக்குப் பதிவு செய்த மாணவர்களை இந்த நிகழ்வில் தவறாது கலந்துகொண்டு பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விவரங்களைப் பெறவிரும்புவோர் 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

*நேரம்:*
காலை 9 மணி தொடக்கம் - பி.ப. 3.30 மணி வரை

| | |
|---|---|
| வணிக முதற் தேர்வு மற்றும் வணிகமாணி பகுதி - II | 29.03.2008 (சனி)<br>30.03.2008 (ஞாயிறு)<br>05.04.2008 (சனி)<br>06.04.2008 (ஞாயிறு)<br>19.04.2008 (சனி)<br>20.04.2008 (ஞாயிறு) |
| வணிகமாணி பகுதி - I மற்றும் வணிகமாணி பகுதி - III | 26.04.2008 (சனி)<br>27.04.2008 (ஞாயிறு)<br>03.05.2008 (சனி)<br>04.05.2008 (ஞாயிறு)<br>10.05.2008 (சனி) |

பதிவாளர்
25.03.2008 [சி/551980]

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அதிபர்
திருமதி புஷ்பராணி சந்திரராசா
அவர்களின் அன்புக் கணவர்
அமரர்

## பொன்னையா சந்திரராசா

அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைகின்றோம். அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/ காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயம்.

[72432]

# பன்றி தாக்கியதில் ஒருவர் காயப்பட்டார்

யாழ்ப்பாணம்,மார்ச்26

தோட்டத்தில்தேங்காய் எடுத்துக்கொண்டு நின்றவரைப் பன்றி தாக்கி காயப்படுத்தியது.

இச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்றது.

பன்றி தாக்கிய வேளையில் கையைக் கொடுத்து தடுக்க முற்பட்டார் எனவும் அது கைவிரலைக் கடித்து காயப்படுத்தியது என்றும் கூறப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த து.நல்லதுரை (வயது 48) என்பவரே காயமடைந்த வராவார்.

காயமடைந்தவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (203-207)

# பனம் பாத்திகள் வெள்ளத்தில் மூழ்கின

யாழ்ப்பாணம்,மார்ச்26

தென்மராட்சி பிரதேசத்தில் பெய்து வரும் கடும் மழையினால் பெருமளவு பனம் பாத்திகள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாத்திகளிலிருந்து எடுக்கப்பட்ட பனங்கிழங்கு தொடர் மழையினால் காயவைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பனம் பாத்திகள் தொடர்ந்து வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் கிழங்குகள் அழுகிப் போய் பயன்படுத்த முடியாமல் போய் விடுமெனவும், இதனால் தமக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டது.(203-207)

# பாலபண்டிதர் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மார்ச் 26

2008 ஆம் ஆண்டுக்கான சைவ சித்தாந்த பிரவேச பாலபண்டிதர் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மே மாதம் இறுதி வாரத்தில் இதற்கான பரீட்சை நடைபெறும் என்று தேர்வுச் செயலர் இரா.செல்வவடிவேல் தெரிவித்துள்ளார்.

தரம் 2 தொடக்கம் தரம் 11 வரையான மாணவர்களுக்கான சைவநெறித் தேர்வு மற்றும் தரம் 12 மாணவர்களுக்கான இந்து நாகரிகம்/ இந்து சமயம் ஆகிய பரீட்சை என்பன நவம்பர் முதலாம் திகதி நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். (72220)

## Alsation நாய் விற்பனைக்கு

2 வயது நிரம்பிய Alsation நாய் விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி இல: 060 221 6906
சுந்தவனம், பொலிகண்டி, வல்வெட்டித்துறை (72433)

# மரண அறிவித்தல்

## சிவக்கொழுந்து விவேகானந்தன்

நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில், பிரம்படியை வதிவிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து விவேகானந்தன் நேற்று (25.03.2008) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், நிரஞ்சன், நிரஞ்சலா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நிற்குணானந்தன், குலரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும், லக்ஷ்மினி, மயூரேஷ், தனுரேஷ் ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம், திருமதி ரோசரட்ணம், மகேஸ்வரி, ராஜசுந்தரம், சச்சிதானந்தம் மற்றும் இராஜேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2008) புதன்கிழமை காலை 9 மணிக்கு கீழுள்ள முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
393/39, கோயில் வீதி, நல்லூர். — வி.நிரஞ்சன் (மகன்)

# ஓய்வூதியக் கட்டணம் செலுத்தும் புத்தகம் வந்து சேர்ந்தது

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் சமூக பாதுகாப்பு சபையின் சுயதொழில் ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்து கொண்டவர்களில் 45 பேரின் ஓய்வூதியத் தவணைக்கட்டணம் செலுத்தும் பதிவுப் புத்தகம் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுக்கு கிடைத்துள்ளன.

இத் திட்டத்தில் இணைந்துள்ள தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் அறிவித்துள்ளார்.(203-207)

# கண்ணீர் பூக்கள்



## அமரர் அந்தோனிப்பிள்ளை செல்வராசா (ரோக்கையா)

(முன்னாள் பொது முகாமையாளர் யாழ்.ப.தே.வ.அ.கூ.ச.)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், அயலவருக்கும் எமது கண்ணீர் கலந்த ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*57, 5 ஆம் ஒழுங்கை,*
*அரசடி, நல்லூர்.*

லெ.பால்சாமி குடும்பத்தினர்,
வே.உதயசூரியன்.

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
11 ★ 06 ★ 1944



மறைவு
11 ★ 02 ★ 2008

## அமரர் கனகன் சின்னத்துரை

தரணியில் தவிக்கவிட்டு
எங்கு நீங்கள் சென்றீர்கள்
தேடும் விழிகளிலோ தென்படவில்லை
ஆனால் எம் நினைவினிலோ
என்றும் நிறைந்துள்ளீர்கள்.

*மருதங்குளம் வீதி,*
*மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி.*

மனைவி,
பிள்ளைகள். (FDC)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தியாகராசா நாகேஸ்வரி



நீர்வேலி வடக்கு, கேணியடியைச் சேர்ந்த சிவக்கொழுந்து தியாகராசா ஆச்சாரி (இரும்புத் தொழிலக உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவி நாகேஸ்வரி 20.03.2008 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மாவிட்டபுரம் காலஞ்சென்ற வெங்கைய தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்ற சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் சக்திவேல் (பிரான்ஸ்), மஞ்சுளா, காலஞ்சென்ற கருணாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் விமலாதேவி (பிரான்ஸ்), விசயச்சந்திரன் (றேடியோ மெக்கானிக்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் தர்மலிங்கம் (வவுனியா), சுந்தரலிங்கம் (தொழில்நுட்பக் கல்லூரி, திருகோணமலை), யோகேஸ்வரி, தனபாலசிங்கம், குணபாலசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சசிதர், சரூபர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2008) புதன்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி வடக்கு, சிவியாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
*இரும்புத் தொழிலகம்,*
*கேணியடி, நீர்வேலி.* [72434]
சிவக்கொழுந்து தியாகராசா (கணவர்)

## பொன்னையா சந்திரராசா



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும், அறுகம்புலம், காரைநகரை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா சந்திரராசா 24.03.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் புஷ்பராணியின் (அதிபர், யா/ காரைநகர் மெய்கண்டான் வித்தியா லயம்) அன்புக் கணவரும் யா/ காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மாணவர்களான கிருஷ்ண வேணி, அனுஷா, யசோதரன், பரணிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சற்குணம், நாகராசா, தவராசா, மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சறோஜா, பரமேஸ்வரி, மதிவதனா, கிருஷ்ணராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அருகம்புலம்,*
*காரைநகர்.* [72440]

தகவல்:
குடும்பத்தினர்.

# புகைபிடிப்பதில் இந்திய மாணவர், ஆசிரியர்; அதிர்ச்சிதரும் தகவல்கள் பல...!



உலக சுகாதார நிறுவனம் சர்வதேச அளவில் இளைஞர் மத்தியில் புகை யிலைப் பாவனை தொடர்பான ஆய்வொன்றை அண் மையில் நடத்தியிருக்கின்றது.

இந்த ஆய்வில் இந்தியா குறித்த பகுதி களை இந்திய சுகாதார அமைச்சர் அந்தோனி ராமதாஸ் அண்மையில் வெளியிட்டுள்ளார்.

மொத்தம் 140 நாடுகளில் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் 12 ஆயிரத்துக்கும் அதிகமான மாணவர்களிடமும் சுமார் 3 ஆயிரம் பள்ளிக் கூடப் பணியாளர்களிடமும் கருத்துகள் கேட் கப்பட்டிருந்தன.

2006 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இந்த ஆய்வின் முடிவுகள் அதிர்ச்சியை அளிப் பனவாக உள்ளன.

பாடசாலை மாணவர்களில் 15 வயதுக்குக் குறைவானோர் மத்தியில் சுமார் 17 சதவீதமா னோர் ஏதோ ஒருவகையில் புகையிலையைப் பாவிக்கின்றார்கள் என்றும், பெரும்பாலும் அவை சிகரெட்டுக்களாக உள்ளன என்றும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

அது தவிர, இந்தியாவின் மத்திய பகுதி நீங் கலாக ஏனைய அனைத்துப் பிரதேசங்களிலும் புகையிலைப் பாவனையில் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் இடையில் பெரிய வித்தியா சம் இல்லை என்றும் இதில் குறிப்பாகத் தெரிய வந்துள்ளது.

இதில் மேலும் கவலைதரும் விடயம் என்ன வென்றால் பாடசாலைகளில் வேலை செய்யும் ஆசிரியர் உள்ளிட்ட பணியாளர்களில் மூன்றில் ஒருபங்குக்கும் அதிகமானவர்கள் புகையிலை யைப் (சிகரெட்டை) பாவிப்பதாகவும் இந்த ஆய்வு புலப்படுத்துகின்றது.

மாணவர்கள் மத்தியில் புகையிலைப் பாவ னைப் பழக்கத்தைத் தடுப்பதில் மாணவர் களுக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டிய இந்தப் பள்ளிக்கூடப் பணியாளர்கள் இந்தப் பழக்கத்தை மேலும் ஊக்கப்படுத்தும் வகை யில் நடந்து கொள்வதாக இந்த ஆய்வு சுட்டிக் காட்டுகிறது.

வயது குறைந்த சிறுவர்களுக்குப் புகையிலையையோ, புகையிலைப் பொருள் களையோ விற்கக்கூடாது என்று நாடாளாவிய ரீதியில் இந்திய அரசு தடை விதித்திருந்தாலும்கூட கடந்தமூன்று ஆண்டுகளில் இத்தகைய விற்பனை குறைந்த தாகத் தெரியவில்லை என்றும் அறிக்கை தெரிவிக்கின்றது.

அதே சமயம், மனதுக்கு உற்சாகமளிக்கும் சில தகவல்களையும் இந்த அறிக்கை வெளியிட்டிருக்கின்றது. பொது இடங்களில் புகைபிடிப்பதற்கு அரசு தடை விதித் திருப்பதன் காரணமாகப் புகை பிடிப்பவர்க ளுக்கு அண்மித்த பகுதியில் இருக்க நேரிடும் புகைப்பிடிக்கும் பழக்கமில்லாதோர் பாதிக்கப் படும் எண்ணிக்கையின் சதவீதம் 49 இலி ருந்து 40 ஆகக் குறைந்திருக்கின்றதாம்.

மேலும் 10 வயதாகும் முன்னரே புகை பிடிக்கத் தொடங்கும் போக்கும் 49 சதவீதத் திலிருந்து 37 வீதமாகக் குறைந்திருப் பதாகச் சுட்டிக்காட்டுகின்றது. ✱



தொகுப்பு: முகுந்தன்

---

## சுமை சுமந்து நிற்கின்றோம்!




தாவீதின்
வழித் தோன்றலே - வழி
தவறிய செம்மறியானதால் - எமக்கோர்
வழிகாட்டுமையா!
எமக்காகச் சிலுவை சுமந்தவனே - இன்று
ஏ-9 ஐ மூடி
விலையேற்ற சுமையை ஏனெமக்கு
சுமக்க வைக்கின்றாய்?
சுமை சுமந்து சோர்ந்திருப்போரை
என்னிடம் வாருமென்றீர்!
பால் விலை மா விலை
தேங்காய் விலையால் - சுமக்க
முடியாமல் எங்கள் விழிகள்
கண்ணீரைச் சுமக்கின்றதப்பா!
பிலாத்துவின் வாரிசுகளான - யாழ்
வியாபாரிகளின் விலையேற்ற சுமையை
எவ்வளவு காலம் சுமக்க
வேண்டும்?
தாவீதின் குமாரனே
எமக்கிரங்கும் என்றதும்
இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு - முன்
மனமிரங்கிய - நீ
பிலாத்துக்களின் விலையேற்ற
சிலுவையில் அறையப்பட்ட எமக்கோர்
விடுதலை தாருமையா!

பி.சி.பிருதிவிராஜ்.

---

## புதன் பொய்கை

### இந்திய மொழிகளுக்குள் மிகத் தொன்மை வாய்ந்தது தமிழ்!



இரண்டாயிரம்ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி உயர் நிலையடைந்திருந்த மொழிகளில் சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன் மற்றும் ஹீப்ரு, பாலி என்பன குறிப்பிடத்தக்கன. அவை தோன்றிய காலத்திலேயே மிகச் சிறுடன் விளங்கியது தமிழ்மொழி. ஆனால் அம் மொழிகள் யாவும் வழக்கொழிந்து சிதைந்து போய் விட்டன. தமிழ்மொழி மட்டும் தனது இளமை குன்றாது ஏட்டிலே தவழ்ந்தும் வழக்கிலே வளர்ந்தும் நாவிலே நடந்தும் கருத்திலே கனிந்தும் கன்னித் தமிழாய் இன்றும் மிளிர்கின்றது. இப்பொழுது இந்தியாவில் வழங்கப்படும் மொழிகளுக்குள்ளே மிகத் தொன்மை வாய்ந்த இலக் கிய வளம் நிரம்பப் பெற்றது தமிழ்மொழியே ஆகும்.



'திராவிட மக்கள் வரலாறு' நூலில்
மட்டக்களப்பு அறிஞர் ஊ.எல்.தம்பிமுத்து

---

நபிகள் நாயகம் அவர்கள் தம் தோழர்களுடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த நேரம் தெருவழியாகச் சிலர் ஒரு சடலத்தை எடுத்துச் சென்றார்கள். இதைக் கண்டதுமே நபிகள் நாயகம் அதற்கு மரியாதை செய்யும் முறையில் எழுந்துநின்றார்.

உடனிருந்த தோழர்களுக்கு இது வியப்பை அளித்தது. அவர்கள் நபி பெருமானிடம் "பெருந்தகையே, இது ஒரு யூதனுடைய பிணம்அல்லவா? இதற்கா தாங்கள் மரியாதை செய்கிறீர்கள்?" என வினாவினார்கள்.

நபிகள்நாயகம் தம் தோழர்களிடம் "அதனால் என்ன?அவருக்கும் ஆத்மா இருக்கத்தானே செய்கிறது" என்று

### எல்லா உயிர்களின் மதிப்பும் ஒன்றே!

சொல்லி மேலும் சொன்னார்.

"எந்த உயிரையும் இழிவாக எண்ணுதல் கூடாது. உலகில் தோன்றியுள்ள உயிர்கள் அனைத்தும் ஒரே மதிப்புக் கொண்டவைதான் என்று"

நபிகள் அவர்களின் மொழிகளைக் கேட்ட தோழர்கள் அமைதியுடன் சிந்திக்கலாயினர்.

---

# 6 மில்லியன் கடல் மைல்கள் பயணித்த எலிசபெத் கப்பல் டுபாய் அரசின் உல்லாச ஹோட்டலாக மாறுகிறது!



பிரிவு என்பது பொதுவாக பெருமளவில் துக்கத்தையும் மன வேதனையையும் காதலர்களுக்கே ஏற்படுத்துமெனக் கூறப் படுகிறது.

ஆனால், காதலுக்கு மட்டுமல்லாது, இடம்பெறும் ஒரு சில பிரிவுகளும் மனதுக்குப் பெரும் வேதனையையும் வருத்தத்தையும் தரும் சந்தர்ப்பங்களும் பலவுண்டு. கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியன்று ஆஸ்திரேலியாவின் சிட்னி துறை முகத்தில் அத்தகைய துக்கத்தையும் மனக் கஸ்டத்தையும் ஏற்படுத்தியதொரு பிரிவு - விடை பெறுதல் சம்பவமொன்று நிகழ்ந்தது.

இங்கிலாந்துக்குச் சொந்தமான இரண்டாவது எலிசபெத் மகாராணி என்ற பெயருடைய கப்பல் தனது சேவையிலிருந்து ஓய்வுபெற்ற சம்பவமே அதுவாகும்.

அதேவேளை அந்தக் கப்பல் தனது சேவை யிலிருந்து ஓய்வுபெற்றுக் கொண்ட அந்த நிகழ் வுடன் சமாந்தரமாக விக்டோரியா மகாராணி என்ற மற்றொரு கப்பல் இரண்டாவது எலிச பெத் மகாராணி கப்பல் ஆற்றி வந்த சேவை யைப் பொறுப்பேற்றுக் கொண்ட புதுமையும் ஒரே சமயத்தில் வாய்த்ததும் உண்மையில் அதிசயமானதொரு சம்பவமேயாகும்.

இத்தகைய விடைபெறல் மற்றும் பிரவேசம் செய்தல் ஆகிய இவ்விரு சம்பவங்களும் ஒரே வேளையில் இடம்பெறும் அதிசயத்தை நேரில் கண்டு களிப்பதற்காக அன்றைய தினம் பல்லா யிரக் கணக்கான பொதுமக்கள் சிட்னி துறை முகத்தில் ஒன்று கூடியிருந்தனர். 40 ஆண்டுகள் காலமாக இரண்டரை மில்லியன் பயணிகள் ஆறு மில்லியன் மைல்கள் தூரத்தை சமுத்திரங்கள் மத்தியில் அங்குமிங்கும் பயணிக்க உதவிய இரண்டாவது எலிசபெத் மகாராணி என்ற அந்தப் பயணிகள் கப்பல் தனது கடைசிக் கடல் பய ணத்தை ஆஸ்திரேலியாவின் சிட்னி துறைமுகத் தில் முடித்துக் கொண்டது. அதேசமயம், தனது அந்த முக்கிய பொறுப்பான பயணிகளை நாடு கள் மத்தியில் இட்டுச் சென்றுவர உதவும் பொறுப்பை விக்டோரியா மகாராணி என்ற பெயர் கொண்ட கப்பலிடம் ஒப்படைத்தது.

இந்தச் சரித்திரப் பிரசித்தி பெற்ற நிகழ்வு கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி மாலை ஆறரை மணிக்கு சிட்னி துறைமுகத்தில் இடம் பெற்றது. கோடை கால முடிவின் பின்னர் வசந்த காலம் மலரும் வேளையான அந்த ரம்மியமான கால நிலையில் மறையும் சூரிய னின் கிரணங்கள் சிட்னி துறைமுகத்தின் நீர்ப் பரப்பைத் தங்க மயமாக்கிக் கொண்டிருந்தன.

இந்தப் பிரசித்தி பெற்ற இரண்டாவது எலிச பெத் மகாராணி கப்பல் முதல்முதலில் இற்றைக்கு 30 ஆண்டுகள் காலத்துக்கு முன்னர் ஒரு நாளில் ஆஸ்திரேலியாவின் சிட்னித் துறைமுகத்தில் நங் கூரமிட்டது. அந்த வேளையிலிருந்து இரண்டாம் எலிசபெத் மகாராணி என்ற இந்தக் கப்பல் எத் தனையோ தடவைகள் சிட்னித் துறைமுகத் துக்கு பயணிகளை அழைத்து வந்தும் ஏற்றியும் சென்று உதவியுள்ளது. இத்தகைய எத்தனையோ கொண்டாட்டங்களை நாம் இடைப்பட்ட இந்தக் காலகட்டத்தில் கொண்டாடி மகிழ்ந்துள்ளோம் என அந்தக் கப்பலின் கப்டன் இயன் மக்னொட் தெரிவித்தார்.

பெரும் முக்கியத்துவம் மிக்க பயணமாக இது அமைந்தமைக்குக் காரணம் இந்தக் கடற் பயணமே இரண்டாவது எலிசபெத் மகாராணி கப்பலின் கடைசிப் பயணம் என்பதாகும்.

293.5 மீற்றர் நீளமுடையதும் 52.2 மீற்றர் உயரம் கொண்டதுமான இரண்டாம் எலிசபெத் மகாராணி என்ற அந்தக் கப்பல் 70 ஆயிரத்து 377 தொன் எடை கொண்டதொன்றாகும். 48 ஆயி ரத்து 923 தொன்கள் எடை கொண்ட பொருள்களை ஒரே தடவையில் ஏற்றிச் செல்லத்தக்க இக்கப் பல் கடலில் 32.5 'நொட்' கடல் மைல் வேகத்தில் பய ணிக்கத்தக்க வசதிகொண்டிருந் தது. அதே வேளை பயணிகள் 1756 பேர் ஒரே தடவையில் பய ணிக்கத் தக்க வசதிகள் கொண்ட இக் கப்பலின் ஊழி யர்களாக ஆயிரத்து 15 பேர் சேவையாற்றிவந்தனர். அந்த வகையில் இந்தக் கப் பலில் ஒரே



தடவையில் பயணம் செய்யத்தக்க பயணி களின் எண்ணிக்கை 2715 பேராகும்.

குறிப்பிட்ட இந்த இரண்டாவது எலிசபெத் மகாராணி கப்பல் 'ஸ்கொட் லாந்தின் ஜோன் பிறவுண்' கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு 1965ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05 ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டது. ஆனால் அக்கப்பல் முதல்முதலில் பொதுமக்களின் பார்வைக் கும் காட்டப்பட்டமை 1967ஆம் ஆண்டு செப்ரெம் பர்மாதம் 20 ஆம் திகதியன் றேயாகும். 1969 ஆம் ஆண்டு மே மாதம் 02ஆம் திகதியன்று தெற்கு ஹம்டனிலிருந்து நியூயோர்க் நகர் நோக்கித் தனது கன்னிப் பயணத்தை அக் கப்பல் ஆரம்பித் தது. அந்தப் பய ணத்தை மேற் கொள்ள அக் கப் பல் 4 நாள்களும் 16 மணித்தியாலயங்களும் எடுத் துக் கொண்டதா கத் தெரியவந்துள்ளது.

உலகின் பல நாடுகளில் யுத்த சூழ் நிலை பெருமளவில் நிலவி வந்த காலகட்டத்தில் கடற்கண்ணி வெடிகள் மிதக்க விடப்பட்ட சமுத் திரங்களில் பயணித்து, நீர் மூழ்கிக் கப்பல்களின் தாக்குதல்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய அச்சுறுத்தல்கள் மத்தி யிலும், தனது கடற் பயணங்களை வெற்றிகர மாக மேற்கொண்டு வந்த அக் கப்பல் ஒரு கால கட்டத்தில் பேராயுதங்களையும் இடத்துக்கிடம் எடுத்துச் சென்றதுமுண்டு.

40 ஆண்டுகள் கால சேவையின் பின்னர் தனது கடற் பயணங்களிலிருந்து ஓய்வு பெறும் குறிப்பிட்ட அக் கப்பலை டுபாய் அரசு 100 மில்லியன் டொலர் செலுத்தி விலைக்கு வாங்கிக் கொண்டுள்ளது.

அந்த வகையில் இரண்டாவது எலிசபெத் மகாராணி என்ற அந்தக் கப்பல் இவ்வாண்டின் எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதியன்று தெற்கு ஹம்ப்ரன் துறை முகத்திலிருந்து டுபாய் நோக்கித் தனது கடைசிக் கப்பல் பயணத்தை மேற்கொள்ளவுள்ளது. அதைத் தொடர்ந்து டுபாய் அரசு அக்கப்பலைப் பயன்படுத்தி கடலில் மிதக்கும் உல்லாச ஹோட்டலொன்றாக அதனை உருவாக்கி உல்லாசப் பயணிகள் தங்கி மகிழ்வதற் கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

ஆனால் இரண்டாவது எலிசபெத் மகாராணி என்ற

## ஆஹா! மூன்று மகாராணிகள் கடலில் ஒரே இடத்தில் சந்தித்த அற்புதக் காட்சி

அந்தப் பயணிகள் கப்பல் நிறுத்திக் கொண்ட சேவையை விக்டோரியா மகாராணி என்ற மற் றொரு பிரமாண்டமான பயணிகள் கப்பல் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவுள்ளது. உயர் வகுப்பு உல்லாசப் பிரயாணிகள் பயணிக் கத் தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் அன்றைய காலகட்டத்தில் கப்பல்கள் உலகைச் சுற்றி மேற்கொள்ளும் பயணத் துக்கு எடுத்துக் கொண்ட காலத்துக்கும் இன்றைய காலகட்டத்தில் கப்பல்கள் அத்தகைய பயணங் களை மேற்கொள்ள எடுத்துக் கொள்ளும் காலத் துக்கும் இடையேயான வேறுபாட்டை எம்மால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

மூன்று பெரிய கப்பல்கள் ஒரே இடத்தில்

விக்டோரியா மகாராணி என்ற இக்கப்பல் தனது ஆஸ்திரேலியாவுக்கான அண்மைய பயணத்தின்போது அத்திலாந்திக் சமுத்திரத்தில் இரண்டாம் எலிசபெத் மகாராணி என்ற மற்றைய உல்லாசப் பயணக் கப்பலுடன் ஒன்றிணைந்து பயணிக்க நேர்ந்தமை விசித்திர மானதொரு சம்பவமாகக் கொள்ளப்பட்டது. அந்த வகையில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரின்அருகே கடலில்அமைந்துள்ளசுதந்திரச் சிலைக் கருகே இவ்விரு கப்பல்களும் இவ்வாண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதியன்று அருகருகே பயணித்த அதிசய சம்பவம் வரலாற்றில் பதிவாகியது. அது மட்டுமன்றி அதே வேளையில் உலகில் அதி நீளம் கொண்ட கப்பல்களில் ஒன்றான 2ஆவது மேரி மகாராணி என்ற கப்பலும் இவ்விரு கப்பல்களுக் குச் சமாந்தரமாக சுதந்திர சிலைக்கருகே பயணிக்க நேர்ந்ததும் விசித்திரமானதொரு சம்பவமாக அமைந்துவிட்டது. அந்த வகையில் 2 ஆவது எலிச பெத் மகாராணி என்ற கப்பல் வரலாற்றிலிருந்து ஒதுங் கிக் கொள்ளும் இந்தவேளையில், விக்டோரியா மகா ராணி மற்றும் 2 ஆவது மேரி மகாராணி ஆகிய இரு கப்பல்களும் கடற் பயண வரலாற்றில் இணைந்து கொள்வது, முக்கியத்துவம் மிக்கதொரு சம்பவமாகக் கருதத்தக்கதாகும்.

தொகுப்பு: பொன்னரசன்

## மாம்பழங்களின் விலைகள் உயர்வு

நகரின் பிரதான சந்தைகளில் மாம்பழங்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

திருநெல்வேலி உட்பட ஏனைய பகுதிகளில் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ஒன்று 100 ரூபா முதல் 120 ரூபா வரையும் ஏனைய மாம்பழ வகைகள் ஒவ்வொன்றும் 70ரூபா முதல் 80 ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றன. (203-111-302)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
021-222 8250,0777- 222422

இலங்கையில் முதற்தடவையாக கம்பனிக்கணக்குகளுடன்
Diploma in Computerized Accounting
*ACCPAC + QuickBooks premier + MYOB*
ஆகிய முன்னணி Accounting Software அனைத்தினூடாகவும் கற்பிக்கப்படும்.

Course Contents
Fundamentals of IT
Manual Accounting
Financial Accounting
Cost Accounting
Taxation (Including VAT)
Stock Control
Bank Reconciliation
Budgeting
Fore Casting
Business Planing

வகுப்புக்கள் ஆரம்பம் :
Weekday Batch: (Tue & Thu)
27/03/2008 - 9 AM , 01/04/2008 - 9AM
Weekend Batch: (Sat & Sun)
29/03/2008 - 3 PM , 30/03/2008 - 3 PM

*Tally Accounting Package*
புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன.



தீராத மூலவியாதியால் அவதிப்படுவோரின் கவனத்திற்கு....!
இரசாயன முறையில் மூலரோக நிவாரணம்
மூல ஆர்சிஸ் இரசாயன மற்றும் மூலரோக பஸ்பம்
மூலரோக சம்பந்தமான வியாதிகளை உடன் குணப்படுத்தும்

மூலரோகம் என்பது பரம்பரை வியாதி. இதனால் ஆரம்பத்தில் சிறு கட்டிகளை உண்டாக்கும். அத்துடன் எரிச்சல், கூடின மலம்போக்குத் தன்மை, சீதம்போக்கு, குடல்இறக்கம், குடலில் வாய்வு நிரம்புதல் போன்ற வியாதிகளை இம்முறையினால் குணப்படுத்த முடியும். மேலும் சிறுநீர் எரிச்சல், சிறுநீர் தடங்கல் போன்ற வியாதிகளையும் குணப்படுத்தக் கூடியது. உடன் பாவித்து குணம் பெறுங்கள்.
யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


Manufactured by:
Kadahapola Dharmarathne Aushadalaya
Kuliyapitiya Road, Kadahapola,
Narammala.

யாழ். மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணைப் பூங்கா
இல,288 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


வ
சிவமயம்

# திருமண அழைப்பு

*நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் பங்குனி மாதம் 14ஆம் நாள் நாளை(27.03.2008) வியாழக்கிழமைமுற்பகல் 9.25மணிமுதல் 11.05 வரையுள்ள அனுச நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்*





திரு.திருமதி இராசலிங்கம்
தம்பதியரின்
கனிஷ்ட புதல்வன்
திருவளர் செல்வன்
**சிறீகாந்தன்** *(சிறீ)*
(தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
மன்னார்).
அவர்களுக்கும்
திரு.திருமதி சங்கரப்பிள்ளை
தம்பதியரின் கனிஷ்ட புதல்வி
திருவளர் செல்வி
**வனிதா** அவர்களுக்கும்

*இறைவன் திருவருள் துணை கொண்டு பண்டத்தரிப்பு பிரான்பற்று பெரிய வளவு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி இராசலிங்கம்
குடும்பத்தினர்,
இல. 14,காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,யாழ்ப்பாணம்.

திருமதி சங்கரப்பிள்ளை
குடும்பத்தினர்,
ஐயனார் கோயில்,
கொடிகாமம்.

*குறிப்பு 29.03.2008 மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.*

*(72253) (இரு வீட்டார் அழைப்பு).*

*பிள்ளையார் துணை*

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து





*லண்டனில் வசிக்கும்*
**சுதாகரன் - வைஹரி** *தம்பதியரின் செல்வப்புதல்வி* **சரிணி** *தனது முதலாவது பிறந்தநாளை இன்று (26.03.2008) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.*

*சரிணிக் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தி, பெரியமாமா, சின்னமாமா, அத்தை, சித்தப்பா, அச்சுவேலியில் வசிக்கும் பெரிய அம்மம்மா, சின்னத் தாத்தா, சின்ன அம்மம்மா, பிரேமா தாத்தா, பாட்டி, லண்டனில் வசிக்கும் சூரித் தாத்தா, பாட்டி, மாமிமார், மாமாமார், சித்தப்பாமார், சித்திமார் அனைவரும் அச்சுவேலி ''உலவிற்குளம் சித்திவிநாயகர்'' அருள் பெற்று 'சகல கலைகளிலும் வித்தகியாக' சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.*

*தகவல்:* **பெரிய அம்மம்மா.**
**திருமதி த.சத்தியவிமலாதேவி,**
*''திருத்தனிகை'', அச்சுவேலி தெற்கு.*

(72408)

**சரிணி**
**26 . 03 . 2008**

*கணபதி துணை*

# திருமண அழைப்பு

*நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் பங்குனி மாதம் 14ஆம் நாள் (27.03.2008) வியாழக்கிழமை பகல் 11.15மணிமுதல் 12.30 மணிவரையுள்ள அபரபட்ச சஷ்டி திதியும், அனுஷ நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்*

திரு.திருமதி வடிவேலு
அவர்களின் ஏக புதல்வன்
திருநிறை செல்வன்
**கிரிதரன்**
அவர்களுக்கும்



திரு.திருமதி சுப்பிரமணியம்
அவர்களின் ஏக புதல்வி
திருநிறை செல்வி
**தயாபரி**
அவர்களுக்கும்

*இறைவன் திருவருள் துணைகொண்டு யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் கோயில் கணபதி கலாசார மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள்,தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*தங்கள் நல்வரவை நாடும்:*

திருமதி வடிவேலு கெங்காதேவி
குடும்பத்தினர்,
*குமாரசிட்டி, மாதனை,*
*பருத்தித்துறை.*

திரு.திருமதி அ.சுப்பிரமணியம்
குடும்பத்தினர்,
*''அகிலகம்''*
*28/1, யாழ் வீதி, யாழ்ப்பாணம்.*

*(இருவீட்டார் அழைப்பு)*


COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science, 5 Months, ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing, 4 Months, ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing, 4 Months, ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering, 3 Months, ~~10,000~~ 2,000 |
| Diploma in Auto CAD, 3 Months, ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office, 3 Months, 1,500 | Accounting Package, 3 Months, ~~10,750~~ 2,150 |

50% Off ADVANCE COURSES
Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6500~~ 3250

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :28/03/2008 1PM
Batch II :29/03/2008 2PM
Batch III : 30/03/2008 2PM
Batch IV: 02/04/2008 1PM


## முருகன் சனசமூக நிலையப் பொதுக் கூட்டம்

நல்லூர்,மார்ச்26

நல்லூர் முருகன் சனசமூகநிலையத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

பிற்பகல்2.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் ம.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். மாநகராட்சி மன்ற சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் து. சோமசுந்தரம், நல்லூர் (ஜே/108) பிரிவின் கிராம அலுவலர் இ.இராகினி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

(203-111)

# 18ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
09 . 08 . 1948

மறைவு
09 . 03 . 2008

**திருமதி ஆனந்தன் (பாலசிங்கம்) நீலா**

09.03.2008 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி ஆனந்தன் நீலா அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியை இன்று (26.03.2008) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

130, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**
(72413) காபரேற்றர் ஆனந்தன்



கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான விளையாட்டு விழா நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். நிகழ்வில் வலைப்பந்தாட்டம் இடம்பெறுவதை முதல் இரண்டு படங்களிலும் உதைபந்தாட்டப் போட்டிக்குத் தயாராக உள்ள வீரர்கள் அரச அதிபர் கே.கணேஷிற்கு அறிமுகம் செய்துவைக்கப்படுவதை மூன்றாவது படத்தில் காணலாம்.

இப்போட்டிகளில் புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்ற வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கான வெற்றிக் கேடயத்தை அரச அதிபர் வழங்குவதை நான்காவது படத்திலும் காணலாம். *(படங்கள்: சுந்தா)*

# கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழா: வதிரி பொம்மேர்ஸ் வி.க. வசமானது கிண்ணம்

யாழ்ப்பாணம்,மார்ச்26

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட வருடாந்த விளையாட்டுப் போட்டியில் வதிரி பொம்மேர்ஸ் வி.க. 71 புள்ளிகளைப் பெற்றுப் பிரதேச கேடயத்தை கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் 47 புள்ளிகளைப் பெற்று அல்வாய் மனோகரா இரண்டாம் இடத்தையும் 21 புள்ளிகளைப் பெற்று வதிரி டயமன்ட் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றின.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் வெற்றிக் கேடயத்தையும் பரிசில்களையும் வழங்கினார்.

போட்டி முடிவுகள் வருமாறு:

தடகளப் போட்டி

* ***ஆண்கள்*** - இமையாணன் ம.வி.க. (42), மைக்கல் வி.க. (29).
* ***பெண்கள்*** - இமையாணன் ம.வி.க. (36.5), நவஜீவன் வி.க. (24).

எல்லே

* ***ஆண்கள்*** - அல்வாய் மனோகரா வி.க., வதிரி டயமன்ட் வி.க.
* ***பெண்கள்*** - அல்வாய் மனோகரா வி.க., வதிரி பொம்மேர்ஸ் வி.க.

கபடி

* ***ஆண்கள்*** - வதிரி பொம்மேர்ஸ் வி.க., கலைமதி வி.க.
* ***பெண்கள்*** - வதிரி பொம்மேர்ஸ் வி.க., யங்கம்பன்ஸ் வி.க.

கிரிக்கெட்

* ***ஆண்கள்*** - வதிரி பொம்மேர்ஸ் வி.க., கலைமகள் வி.க.
* ***பெண்கள்*** - அல்வாய் மனோகரா வி.க., வதிரி டைமென்ட் வி.க.

கரப்பந்து

* ***பெண்கள்*** - சிவகுமரன் வி.க., பொம்மேர்ஸ் வி.க.
* ***ஆண்கள்*** - சிவகுமரன் வி.க., வதிரி டைமன்ட் வி.க.

உதைபந்து

* ***ஆண்கள்*** - அல்வாய் மனோகரா வி.க., வதிரி பொம்மேர்ஸ் வி.க.

வலைபந்து

* ***பெண்கள்*** - வதிரி பொம்மேர்ஸ் வி.க., அல்வாய் மனோகரா வி.க.

பூப்பந்தாட்டம்

* ***ஆண்கள்*** - வதிரி டைமன்ட் வி.க., அல்வாய் மனோகரா வி.க.
* ***பெண்கள்*** - வதிரி பொமேர்ஸ் வி.க., மைக்கல் வி.க.

மேசைப்பந்தாட்டம்

* ***ஆண்கள்*** - வதிரி டைமன்ட், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

**சிறந்த வீரர்கள்**

★ *நீளம் பாய்தல் (6.19மீ)* - ஜி.கோபிநாத் - நவஜீவன் வி.க.

★ *நீளம் பாய்தல் (4.00மீ)* - ம.பார்த்தீபா - மைக்கல் வி.க.

★ *100 மீற்றர் சுவட்டு ஓட்டம் (11.46செக்கன்)* - எஸ்.சஞ்சயன் - இமையாணன் மத்தி வி.க.

★ *100 மீற்றர் சுவட்டு ஓட்டம் (14.7செக்கன்)* - என்.மயூரி - உடுப்பிட்டி வி.க.

★ *2008இற்கான சிறந்த வீரன்* - எஸ்.சஞ்சயன் - இமையாணன் மத்தி வி.க. (1-70)



பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.உதயகுமாரின் துணைவியார் திருமதி நந்தினி உதயகுமார் மாணவன் ஒருவருக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கும்போது...

# கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் கழகம் எல்லே போட்டியில் கேடயம் சுவீகரித்தது

வலி.வடக்கு,மார்ச்26

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியில் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகமும் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன

ஒரு இன்னிங்ஸ் கொண்ட இந்தப் போட்டியில் இரு அணிகளும் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக இரு அணிகளுக்கும் தலா 15 பந்துகள் வீச அனுமதிக்கப்பட்டது.

முதலில் விளையாடிய ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழக வீரர் இராஜேஸ்வரன் 02 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலாஜோதி விளையாட்டுக் கழக வீரர் சுகந்தன் ஒரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் 15 பந்துகளும் வீசி முடிக்கப்பட்டு இருந்தன.

ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் 02:01 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் கலாஜோதி விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று உடுவில் பிரதேச செயலக சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (1-86)



கைதடி - நாவற்குழி அ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டியில் ஒலிம்பிக் தீபம் ஏற்றும்போது...

# காரைநகர் பிரதேச கரப்பந்தாட்டம்: அம்பாள் வி.க. சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு,மார்ச்26

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற கரப்பந்தாட்டப் போட்டியில் காரைநகர் அம்பாள் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் அம்பாள் விளையாட்டுக் கழகமும் சோலையான் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் சுற்றை அம்பாள் விளையாட்டுக் கழகமும் இரண்டாம் சுற்றை சோலையான் விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன.

மூன்றாவது சுற்றை வெற்றிபெறும் அணி சம்பியன் என்ற நிலையில் களமிறங்கிய இரு அணிகளும் மோதிக்கொண்டதில் அம்பாள் விளையாட்டுக் கழகம் மூன்றாவது சுற்றையும் வென்று 2:1 என்ற சுற்றுக்களினால் சோலையான் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. (1-86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# பல்கலை. - சென்.ஜோன்ஸ் அணிகள் மோதல் மூன்று நாள் தொடர் ஆட்டமாக நடந்தது

## 189 ஓட்டங்களால் பல்கலை வெற்றி

வலி.வடக்கு,மார்ச்26

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கிரிக்கெட் அணி சென்.ஜோன்ஸ் கல்லூரியுடன் இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டத்தில் 189 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் பல்கலைக்கழக கிரிக்கெட் அணிக்கும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி கிரிக்கெட் அணிக்கும் இடையில் மூன்று நாள்கள் கொண்ட ஆட்டம் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 65.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 255 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சஜீவன் 55, பிரசாத், நிசாந்தன் தலா 36, குகராஜ் 30 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

கரிபிரவீன் 06 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும் ஜனுசன், கரிவதனன் முறையே 29, 27 ஓட்டங்களுக்கு தலா 02 விக்கெட்டையும் தவநீதன், எலோன்சன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 43.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பிரணவன் 26, ஜனுசன் 1[illegible], விதுசன் 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

சஜீவன் 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 13 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் சர்வானந் 13 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 20 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் மற்றும் சுபாஸ்கரன், பிரசாத் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பல்கலைக்கழக அணி 49.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

சர்வானந்தன் 55, குகராஜ் 25 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

தவநீதன் 11 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 25 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்ளையும் கரிவதனன், ஜனுசன் முறையே 18, 38 ஓட்டங்களுக்குத் தலா 02 விக்கெட்டுகளையும் எவோன்சன், விதுசன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு இரண்டாவது நாளில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 42.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 109 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

பிரணவன் 29, ஜனுசன் 23, கரிபிரவீன் 15 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

சர்வானந்தன் 11.4 ஓவர்கள் பந்துவீசி 35 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் ஜெயந்தன், சஜீவன் முறையே 13, 12 ஓட்டங்களுக்கு தலா 02 விக்கெட்டுகளையும் ரவிசங்கர், சுபாஸ்கரன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

ஆட்ட நிறைவில் பல்கலைக்கழக அணி 189 ஓட்டங்களினால் சென்.ஜோன்ஸ் கல்லூரியை வெற்றிபெற்றது. (1-86)

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 02 1953



உதிர்வு 12 04 2001

திருமதி **இந்திரசேனா கனகநாயகம்**

(இந்திரா அக்கா)

திதி: 26.03.2008

ஏழு ஆண்டுகள் சென்றாலும்- உங்கள்
நினைவலைகள் நிழலாக என்றும் தொடர்கின்றன.

கணவர், சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

தகவல்:
வி.கனகநாயகம் (கணவர்),
கனகேந்திரா கொமினிக்கேசன்,
தாளையாலர் பொக்கை,
செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

தொலைபேசி எண்கள்:
021 222 3715, 021 4581245,
I.D.D.: 0094 212223715, 0094214581245.

(72848)

# தமிழகத்தில் ஆட்சியை மாற்றுவதற்கு புனிதப் போரைத் தொடங்கியுள்ளோம்

## சரத்குமார் ஆவேசப் பேச்சு

சென்னை, மார்ச் 26

''தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த, எங்களின் புனிதப் போர் தொடங்கி விட்டது'' - என்று, சமத்துவ மக்கள் கட்சித் தலைவர் சரத்குமார் ஆவேசமாகப் பேசியுள் ளார்.

தென்சென்னை கிழக்கு மாவட்டம் சார்பில் 'மாற்றத்தை நோக்கி' என்ற தலைப்பில் மயிலை மாங்கொல்லையில் சமத்துவ மக்கள் கட்சி பொதுக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்தது. கூட்டத்தில் கட்சித் தலை வர் சரத்குமார் பேசியவை வருமாறு:-

''தமிழக மக்களுக்கு மீண்டும் நல்லாட்சி கொண்டுவரவேண்டும் என்பதற்காக கட்சி தொடங்கினேன். பண்பான, நாகரிகமான அரசியல் நடத்துவேன். தற்போது தமிழகத்தில் நாகரிகமற்ற, பண்பற்ற அரசியல் நடக்கிறது. தமிழகத்தில் காமராஜர் ஆட்சி சிறந்த ஆட்சியாக இருந்தது. எட்டு அமைச்சர்களைக் கொண்டு ஊழலற்ற ஆட்சி நடத்தினார். கல்வி, தொழில், விவசாயம் உள்ளிட்ட புரட்சிகளை காமராஜர் ஏற்படுத்தினார். சமூக நீதியைக் கடைப்பிடித்தார். அனைத்து சமுதாயத்தினரையும் ஒன்றுபடுத்தினார்.

''இப்போது 1967ஆம் ஆண்டிற்குப் பிறகு, அராஜக ஆட்சி நடந்துவருகிறது. வன்முறை ஆட்சி தலைவிரித்தாடி, ஊழல் ஆட்சியாக மாறிவிட்டது. விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு. அவர்களுக்கு தொலை நோக்கு பார்வையுடன் பாசன வசதிகள் செய்து தரவேண்டும். படித்தவர்களும் விவசாயத்தில் இறங்கவேண்டும்.

''ஆட்சி மாற் றத்தை ஒரேநாளில் கொண்டு வர முடி யாது. படிப்படி யாகத் தான் கொண்டு வர முடியும். தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த எங்களின் புனிதப்போர் தொடங் கி விட்டது. இந்தப் பயணம் முடிவடை யாது. உண்மையும், உழைப்பும், நியா யமும் ஒரு மனிதன் கடைப்பிடித்தால் வாழ்வில் வெற்றி பெறுவான்.

''நாங்கள் தற் போது ஒட்டப்பந்தயத்திற்கு வந்து விட்டோம். விஜய காந்தும், நானும் பின்நோக்கி ஓட வேண்டுமாம். ஸ்டாலின் மட்டும்தான் முன்னோக்கி ஓட வேண்டுமா? முதல்வர் பதவி என்ன உங் கள் வீட்டுச் சொத்தா? ஆற்றல், திறமை எல்லோருக் கும்தான் இருக்கிறது. ஒரு நடிகர் கட்சி ஆரம் பிக்கலாமா என்று சிலர் கேட்கின்றனர். டாக்டர், இன்ஜினி யர் கட்சி ஆரம்பிக்கும்போது நடிகர் ஏன் ஆரம் பிக்கக் கூடாது. என்னிடம் எந்தத் துறை ரீதியிலான கேள்வி கேட்டாலும் சிறப் பாகப் பதில் அளிக்க முடியும்.''= இவ்வாறு சரத்குமார் பேசினார்.

### முதலுதவிப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 26

இலங்கை செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்தால் எதிர் வரும் சனிக்கிழமை நடத்தப்படவிருந்த அடிப்படை முதலுதவிப் பரீட்சை பிற் போடப்பட்டுள்ளது.

இப்பரீட்சை அடுத்த மாதம் 26 ஆம் திகதி நடை பெறுமென இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் வி.கே.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

(203)

### கத்தி கைதவறி காயப்படுத்தியது

யாழ்ப்பாணம், மார்ச் 26

விறகு வெட்டிக் கொண்டிருந்த கத்தி கை தவறி அங்கு விளையாடிக் கொண்டிருந்த ஏழு வயதுச் சிறுமியின் தலையைத் தாக்கி காயப் படுத்தியது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சி.யதுசினி (வயது 7) என்ற சிறுமியே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

(203-207)

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை செல்வராசா

(றொக்கையா)



யாழ்ப்பாணம், 7/2, மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், 15A, ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை செல்வராசா (ஓய்வுபெற்ற முகாமையாளர், பனை தென்னை அபிவிருத்திச் சபை), 23.03.2008 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை = பூரணம் தம்பதியரின் செல்வப் புதல்வனும் காலஞ்சென்ற கபிரியேல் மாட்டின் = திரேசம்மா தம்பதியரின் பாசமிகு மூத்த மருமகனும் யசிந்தாவின் அன்புக் கணவரும் டெனி யசோதரன் (மக்கள் தொடர்பு உத்தியோகத்தர், கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை, றாகம), பெனி, சுபோதரன் (கொழும்பு), ஜீன் ஷர்மிலி (மூன்றாம் வருட மாணவி, நுண்கலைத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்), ஆகியோரின் பாசமிகு தந்தையும் தேவராசா (கட்டட ஒப்பந்தகாரர்), சறோ, சந்திரா, ஆனந்தன் (கனடா), தனசோதி (ஆசிரியர், பாஷையூர் சென் அன்ரனிஸ் றோ.க.வித்தியாலயம்), றெஜி (கனடா), விஜி ஆகியோரின் அன்புச் சகோதரனும் அரியநாயகம், செல்வநாயகம் (மட்டக்களப்பு), மேரி மெற்றில்டா, பிரான்சிஸ்கா (டென்மார்க்), கொண்சி (டென்மார்க்), ராசநாயகம் (இத்தாலி), விக்ரர் (லண்டன்), காலஞ்சென்ற மேரிஸ்ரெலா, சௌந்தரநாயகம், பத்மா, தம்பிராசா, பசில், விக்ரோ (கனடா), பாலசுப்பிரமணியம் (இலங்கை மின்சாரசபை), றெஜினோல்ட் (கனடா), குகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மல்லிகா, மாலா, ஜீவா, ஜெயராசா, ஜெகராசா, கலா, பவுண், கெங்கா ஆகியோரின் சகலனுமாவார்.


அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்திலிருந்து இன்று (26.03.2008) பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு யாழ்.கிறிஸ்து அரசர் ஆலயத்தில் (கொய்யாத்தோட்டம்) திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*15A, ஈச்சமோட்டை,*
*கடற்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

[72426]

தகவல்:
குடும்பத்தினர்.

## நாகர் பொன்னுத்துரை (ஜேம்ஸ்)



சில்லாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகர் பொன்னுத்துரை (ஜேம்ஸ்) 24.03.2008 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் மாகிறேற் (முத்தம்மா)வின் அன் புக் கணவரும் அருமைத்துரை (ராசா), சிந்தாத்துரை (சின்னத்துரை), ஜெனோவா, காலஞ்சென்ற தேவதாஸ் (தேவா) மற்றும் பங்கிராஸ் (றஞ்சன்), றேவதி, ஜெனிற்றா, அன்ரன் றொபின் (றொபின்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் டொறிஸ், கலீனா, செலஸ், திஷாந்தினி, கொன்ஸ்ரன்ரையின் (ராஜன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் சுகன்யா (தேனுகா), வின்சலஸ், டெவோறா, நபுதியா, மறீன்சபீனா, செவான் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (26.03.2008) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இரங்கல் திருப்பலிக்காக புனித கதிரைமாதா தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*சில்லாலை தெற்கு,*
*பண்டத்தரிப்பு.*
*T.P. 077 3652414*
*077 6510447*

[72424]

தகவல்:
செலஸ் (மருமகன்).


### திருமணசேவை

17.10.1976, ஆயிலியம், செவ்வாய் அற்ற, 29.01.1981 விசாகம், 8இல் செவ்வாய் மணமகன்களுக்கு வெளிநாட்டு/ உள்நாட்டு மணமகள்கள் தேவை. மற்றும் இந்து, கிறிஸ்தவ மணமக்களும் தேவை.

துர்க்கா திருமண சேவை
*இல.09, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.*
T.P.*021 4591417* (72423)



### யப்பான் சைக்கிள்





✱சுலபமான ஓட்டத்திற்கும்
✱சுலபமான பாவனைக்கும்
✱ நீண்டகால உபயோகத்திற்கும்
✱பெண்கள், வயதானோர், இதயபலவீனமானோர் சுலபமாக ஓடுவதற்குரிய சைக்கிள்கள்
✱ உதிரிப்பாகங்கள்
✱குறைந்த விலையில் றொபின் பம்பி, மின்சாரப் பம்பிகளும் உண்டு.

NO NO PARKINA PROPLEM
சித்திவிநாயகர்
*155, K.K.S.றோட், கொக்குவில் சந்தி.*
*(மஞ்சவனப்பதி முருகன் கோவில் அருகில்).*

(72427)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## இளையவன் கணபதிப்பிள்ளை

பிறப்பு: 09.10.1946

இறப்பு: 25.02.2008

*திதி: 26-03-2008*

இல்லத்தின் வேராக இல்லறத்தில் விழுதாக எம்மைத் தாங்கும் மரமாக நின்றீர் =அப்பா!
உறவுகள் ஆயிரம் இருப்பினும்= அப்பா உங்கள் அன்பினை உள்ளம் தேடுதே!
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் ஆறாது நம் துயரம்! மாறாது நம் கவலை
ஏற்றிய தீபமாய் நெஞ்சில் வீற்றிருப்பீர்! போற்றிடுவோம் உம்மை!!

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அளவெட்டி,
மணற்புலம்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
12.12.1950

மறைவு
25.02.2008

அமரர்

## பொன்னம்பலம் பத்மராசா

(சின்னண்ணை)

புதுமலராய் பூத்து மண்ணில் புன்னகைத்த எங்கள் அன்புத் தெய்வமே!
இரு யுகம் போல் இருக்குது அப்பாவே! நீங்கள் இருந்த இடம் தவிக்குது அப்பாவே!
உங்கள் முகம் காணாது தவிக்கின்றோம் அப்பாவே! ஆலமரமாய் இருந்துவிட்டு
அமைசரமாய் போனீர்களே எங்கள் அப்பாவே!
இப் புவியில் நாங்கள் இருக்கும் வரை எங்கள் இதயத்திலேற்றி
உங்களை இறைஞ்சிடுவோம் அப்பாவே!

25.02.2008 அன்று காலமான எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (26.03.2008) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*தெட்டிலிப்பாய்,*
*கோண்டாவில்.*

மனைவி - யோகேஸ்வரி, பிள்ளைகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.

இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

*(72410)*

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தமிழர் தரப்பின் நியாயத்தை எடுத்துரைக்கும் இடதுசாரிகள்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - பேச்சு மூலம் - தீர்வு காணும் எண்ணம் கொழும்பு அரசுக்கு அறவே கிடையாது என்ற உண்மை சர்வதேச ரீதியிலும் இப்போது அம்பலமாகி, சம்பந்தப்பட்ட தரப்புகளினால் நன்கு உணரப்படும் விவகாரமாகியிருக்கிறது.

போர்வெறித் தீவிரம் மூலம் தமிழர்களை மேலும் மேலும் அடக்கி, ஒடுக்கி ஆள்வதன் வாயிலாக நீதி, நியாயம் கோரும் அவர்களின் சுதந்திர உணர்வைச் சிதைப்பதே கொழும்பின் ஒரே எண்ணம் என்பதும் அப்பட்டமாகி வருகின்றது.

உலகில் உள்ள இடதுசாரி அமைப்புகள் பலவும் சேர்ந்து இம்மாத முற்பகுதியில் அம்ஸ்ரடம் நகரில் நடத்திய சர்வதேச மாநாட்டிலும் இலங்கை அரசின் இந்த நிலைப்பாடு குறித்து தீவிர கவனமும் சிரத்தையும் எடுக்கப்பட்டிருக் கிறது என வெளியாகும் தகவல்கள், இலங்கைத் தீவில் பௌத்த - சிங்கள மேலாண்மைப் போக்குடைய ஆதிக்க திமிர்த்தனம் குறித்து உலகம் புரிந்து கொள்ளத் தொடங்கிவிட்டது என்பதையே காட்டுகின்றன.

சுமார் முப்பது நாடுகளைச் சேர்ந்த சர்வதேச இடதுசாரி அமைப்புகளின் பிரதிநிதிகள் இலங்கையின் போக்குத் தொடர்பாக அம்ஸ்ரடம் மாநாட்டில் எடுத்த முக்கிய மூன்று தீர்மானங்கள் ஊன்றிக் கவனிக்கத் தக்கவை.

* யுத்தத் தீவிரப் போக்கை நிறுத்தி, அமைதி வழியில் தீர்வு காண கொழும்பு இணங்கும் வரை இலங்கைக்கு எந்த உதவிகளையும் வழங்கவே கூடாது என அடுத்த வாரம் கூடும் - இலங்கைக்கு உதவி வழங்கும் - ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை வற்புறுத்திக் கோர வேண்டும்.
* யுத்தத் தீவிரத்தை இலங்கை கைவிடும்வரை உலக நாடுகள் இலங்கைக்குக் கடன் உதவிகளைக் கூட வழங்கக் கூடாது என உதவும் நாடுகளைக் கோர வேண்டும்.
* இலங்கையில் யுத்தத்தை நிறுத்தும்படி கோரி இடதுசாரி அமைப்புகள் சர்வதேச, தேசிய ரீதியில் போராட்டங்களை நடத்த வேண்டும். தத்தமது நாடுகளிலும் இத்தகைய ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு சர்வதேச மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், இலங்கை விவகாரத்தில் கொழும்பின் கொடூரப்போக்கு உலகளாவிய ரீதியில் அம்பல மாகி வருவதை எடுத்துக் காட்டியிருக்கின்றன.

இன மத, மொழி வேறுபாடின்றி - அரசியல் பக்கச் சார்பை முக்கியப்படுத்தாமல் - சிறுபான்மையினரின் உரிமைகளுக்காக மனவுறுதியோடு குரல் எழுப்பிவரும் இடதுசாரிகள் தென்னிலங்கையில் இன்னும் - இன்றும் - உள்ளனர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் சில மூத்த அரசியல் பிரமுகர்களும் ஓரிரு அரசியல் கட்டமைப்புகளுமாக சில தரப்புகள் இங்கு இருக்கவே செய்கின்றன.

அவற்றில் முன்னிலை வகிக்கும் இடதுசாரி முன்னணியே, மேற்படி சர்வதேச மாநாட்டில் ஈழத் தமிழர்களின் அவலத்தை அம்பலப்படுத்தி, உண்மையை உலகுக்கு உணரவைக்கும் - உறைப்பாக உரைக்கும் - உன்னதப் பணியை முன்னெடுத்திருக்கின்றது.

ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷையாக விளங்கும் தமிழர் தேசியம், தமிழர் தாயகம், அவர்களின் சுயநிர்ணய உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்து அவற்றின் அடிப்படையில் ஒரு தீர்வைக் காண்பதற்கு உலகம் முழுவதும் உள்ள இடதுசாரி மற்றும் முற்போக்கு அமைப்புகள், தொழிற்சங்கங்கள், புத்திஜீவிகள், முற்போக்கு ஊடகங்கள் ஆகிய தரப்புகள் ஆதரவு வழங்கவேண்டும் என இடதுசாரி முன்னணி கோரியிருக்கின்றமையும் முக்கிய விடயமாகும்.

ஈழத் தமிழ் மக்கள் தங்கள் தாயக பூமியில் - வரலாற்று ரீதியாக அவர்கள் வாழ்ந்து வந்த பாரம்பரிய மண்ணில் - அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி சுதந்திரமாக, கௌரவமாக வாழவிரும்புகின்றார்கள். இந்த இலங்கைத் தீவைத் தாயகமாகக் கொண்ட பிற தேசிய இனங்களோடு சமத்துவமாகவும், சம உறவோடும் வாழும் அதேசமயம், தமது பண்பாட்டைப் பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தையும், தனித்துவத்தையும் பாதுகாத்து, தமது தாயக மண்ணில் தம்மை தாமே ஆளும் சுயாட்சி உரிமை யோடு சீவிக்க விரும்புகிறார்கள்.

வேறு இனத்தவர்களை அடக்குவதையோ அல்லது பிற இனத்தவர்களால் அடக்கி ஆளப்படுவதையோ அவர்கள் விரும்பவில்லை.

இந்த உண்மையை சர்வதேச சமூகத்துக்கு உணர்த்துவதன் மூலம் தமிழர்கள் தரப்பில் உள்ள நியாயத்தை எடுத்துரைப்பது ஒரு முக்கிய பணியாகும்.

அக்கடமையை நடுநிலை நோக்கோடு முன்னெடுக்கும் இடதுசாரித் தரப்புகள், இவ்விவகாரத்தில் பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான தமிழர்களால் மதித்துப் பாராட்டப்படுவார்கள்.

# இலங்கையில் போரிடும் இரண்டு தரப்புகளும் பேச்சு மேசைக்குத் திரும்பவேண்டும்

## தென்னாபிரிக்கா கோரியுள்ளது



கொழும்பு,மார்ச்26

சிறிலங்கா அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சுகளுக்குத் திரும்பவேண்டும் என்று தென்னாபிரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்தவார இறுதியில் பிரித்தானியாவில் உள்ள ஈஸ்ற் லண்டன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ''இலங்கையின் இனப்பிரச்சினை'' என்னும் தலைப்பிலான அனைத்துலக மாநாட்டில் தென்னாபிரிக்கா சார்பில் தொலைத் தொடர்புத்துறை பிரதி அமைச்சர் இராதாகிருஸ்ண பட்டாயாச்சி கலந்து கொண்டார்.

இந்த மாநாடு தொடர்பாக லண்டன் பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசியாவிற்கு அவர் வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளதாவது:

இலங்கையில் இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கு ஓர் இறுதித் தீர்வைக் காண்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு தென்னாபிரிக்கா அரசு தொடர்ந்து ஆர்வமாக உள்ளது.

இந்த மாநாட்டில் நான் கண்ட உணர்வுகளையும் முடிவுகளையும் ஆபிரிக்க அரசாங்கத்திற்கு தெரிவிப்பேன். சிறிலங்கா அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச்சுக்குத் திரும்பவைப்பதே இம் மாநாட்டின் நோக்கம். பேச்சுக்களே இப்பிரச்சினைக்குரிய தீர்வுக்கான வழியை ஏற்படுத்தும் - என்றார்.

சிறிலங்கா அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச்சுக்குத் திரும்ப வைப்பதனை நோக்கமாகக் கொண்ட இம்மாநாடு சிறிலங்கா தொடர்பான அனைத்துலகத்தின் கவனத்தை திரும்புவதற்கான ஒரு படிக்கல்லாகும்.

அனைத்துலக சமூகம், அனைத்துலக அமைப்புகள், தொண்டர் அமைப்புகள் என்பன சிறிலங்கா அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் பேச்சு மேசைக்குத் திரும்ப வைப்பதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் என்று இந்த மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட உலக சமாதான ஆதரவுக் குழு இம்மாநாட்டை ஒழுங்குசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(203)

# பயங்கரவாதம் நாட்டை அழித்துவிடும் விட்டுக்கொடுக்காமல் போராடுங்கள்

## இலங்கைப் பிரதமருக்கு இஸ்ரேலியப் பிரதமரின் ஆலோசனை இது

ஜெருசலேம்,மார்ச்26

பயங்கரவாதத்துக்கு விட்டுக்கொடுக்கக் கூடாது, ஏனென்றால் அது உங்கள் நாட்டை அழித்தொழித்துவிடும். பயங்கரவாதம் போராடப்படவேண்டிய ஒன்று. அதற்கு சரணடைந்துவிடக் கூடாது.

இவ்வாறு இஸ்ரேலிய பிரதம மந்திரி எகுட் ஒல்மோட் அங்கு விஜயம் செய்துள்ள இலங்கைப் பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார்.

இஸ்ரேலிய பிரதம மந்திரி அலுவலகத்திலிருந்து விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் இஸ்ரேலுக்கு 4 நாள் விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைப் பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரம நாயக்க விஜயத்தின் முதல்நாளன்று பயங்கரவாதத்துக்கு எதிராகக் கடுமையாகப் போராடியாகவேண்டும் என்று தெரிவித்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை பிரதம மந்திரி ஜெருசலேமில் பத்திரிகையாளர்களுடன் உரையாடியபோது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது பி.கே.கே., தலிபான், பிலிப்பைன்சிலுள்ள இஸ்லாமிய குழுக்கள் மற்றும் அல்கைடாவுடன் தொடர்புடைய அமைப்புக்களுடனெல்லாம் உறவுகளைக் கொண்டுள்ளது என்று கூறியுள்ளார்.

சிரியா மற்றும் லெபனானிலுள்ள பலஸ்தீனிய முகாம்களிலும் புலிகள் இயக்க இளைஞர்கள் பயிற்சி பெற்று வருவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று கூறிய இலங்கை பிரதம மந்திரி, இலங்கைப் பிரச்சினை பற்றி விளக்குகையில் தற்கொலைத் தாக்குதல்களை விடுதலைப் புலிகளே நடத்திவருகிறார்கள். இதனை சில பலஸ்தீன குழுக்களிடமிருந்தே அவர்கள் கற்றிருக்கிறார்கள் என்று பொதுவாக நம்பப்படுகின்றது என்றார்.

இஸ்ரேலிய அதிபர் ஷிமொன் பெரெஸ், பிரதமர் எகுட் ஒல்மோட் மற்றும் வெளிநாட்டமைச்சர் ஷிப்பி லிவ்னி ஆகியவர்களுடனும் அவர் ஆலோசனை நடத்தியுள்ளனர். மேற்குக் கரைக்கு விஜயம் செய்து பலஸ்தீன அதிகார சபையின் அதிபர் மக்மூத் அப்பாஸையும் சந்திக்கவிருக்கிறார்.

இஸ்ரேலும் இலங்கையும் பல விடயங்களில் ஒரே தன்மையைக் கொண்டிருப்பதாகவும் இரு நாடுகளும் பயங்கரவாதத் தாக்குதல்களை எதிர்கொண்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

(ப)

# இல்லாத பதவிகளை உருவாக்கி நிதி வீண் விரயம் மேல்மாகாண நிர்வாகம் மீது ஜே.வி.பி. வழக்கு

## மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்றுமுன்தினம் மனுத்தாக்கல்

கொழும்பு,மார்ச் 26

இல்லாத பதவிகளை உருவாக்கி, அப்பதவிகளுக்கு ஆளணி, அலுவலகங்கள் என்பவற்றை ஏற்படுத்தி வீணே செலவு செய்கின்றது மேற்கு மாகாண சபை எனக் குற்றம் சுமத்தி, அச்செயற்பாட்டைத் தடுத்து நிறுத்த வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றது ஜே.வி.பி.

மேல்மாகாண ஆளுநர், மேல்மாகாண முதல்வர் உட்பட பலருக்கு எதிராக கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் மேல்மாகாண சபையின் ஜே.வி.பி. உறுப்பினர்களான - தீர்த்திவருண ராஜபக்ஷ உட்பட - 23 பேரும் 'ரிட்' மனு ஒன்றைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

மாகாணசபைகளில் எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சிக்கொறடா, ஆளுங்கட்சிக் கொறடா, ஆளும் கட்சி அமைப்பாளர் என்ற பதவிகள் எல்லாம் இல்லை. ஆனால் மேல்மாகாண சபை இல்லாத அப்பதவிகளை எல்லாம் உருவாக்கிக் கொண்டு, அவற்றுக்காகத் தனித்தனி அலுவலகம் திறந்து, ஆளணியினரை நியமித்து, பெரும் தொகைப் பணத்தை வீணே செலவிடுகின்றது என மேற்படி மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இத்தகைய பதவிமுறைகளை இரத்துச் செய்யும்படி உத்தரவிடுமாறும் -

இப்பதவிகளைப் பிழையான முறையில் உருவாக்கி, அரச நிதியை - மாகாண சபை வருமானத்தை - துஷ்பிரயோகம் செய்தவர்களிடமிருந்து அவற்றை மீள அறவிட நடவடிக்கை எடுக்கும்படி கட்டளையிடுமாறும் -

மேற்படி மனுவில் ஜே.வி.பியின் மாகாணசபை உறுப்பினர்கள் கோரியிருக்கின்றனர். (சி)

# மீன் எழுச்சித் திட்ட அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம்,மார்ச் 26

'நியாப்' திட்டத்திற்குப் பதிலாக மீன் எழுச்சித் திட்டத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (203)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி - 14 | 27.03.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: பஞ்சமி | மு.ப. 08.23 |
| நட்சத்திரம் : | அனுஷம் |
| | பி.ப. 03.52வரை |
| சுபநேரம் : | 07.44 - 09.14 |
| ராகுகாலம் : | 01.44 - 03.14 |

# சிலுவைப் பாடுகள்

*கல்வாரி தன்னில் தோன்றிய காட்சி*
*சொல்வாரி தன்னில் அடங்குமோ சாட்சி*

*முள்முடி தரித்தீர் முதுகு முறிந்திட*
*பள்ளமும் வீழ்ந்தீர் படுகுழி செறிந்திட*
*கசையடி பட்டீர் வசைமொழி கேட்டீர்*
*விசைபட வீழ்ந்தீர் விண்ணினை மீட்டீர்*

*சிலுவையில் தொங்கி சிந்தினீர் சோரி*
*எலும்புகள் தோன்றவே வழிந்தது மாரி*
*நெற்றியில் முள்ளின் கீறல்கள் குத்த*
*முற்றுமே வழிந்தது சிந்திய இரத்தம்*


*தண்ணீர் என்றீர் விண்ணினைப் பார்த்தீர்*
*கண்ணீர் தந்தார் பஞ்சினை சேர்த்தார்*
*சிவந்த ஆடையைக் களைந்தார் அரையில்*
*கவந்தக் கந்தையைச் சேர்த்தார் நிரையில்*

*வானமும் வையமும் ஒருங்கே அசைந்திட*
*தேவ தூதர் ..ண்கள் நிரம்பிட*
*கல்வாரி தன்னில் தோன்றிய காட்சி*
*சொல்வாரி தன்னில் அடங்குமோ சாட்சி.*



- பண்டிதர் க.சச்சிதானந்தன்.

*(மூதறிஞர், பன்முகப் புலமையாளர் பண்டிதர் க.சச்சிதானந்தன் 21.03.2008இல் இறப்பதற்கு சில நாள்களுக்கு முன்னர் யாத்த கவிதை என்று கருதப்படுவது இது. இதனை அவரது மாணவன் (இணுவிலைச் சேர்ந்த) ந.ஞானதுரையார் தும்பளையில் உள்ள அவரது இல்லம் சென்றவேளைகண்டெடுத்து உதயனுக்குத் தந்து உதவினார்)*



(சச்சிதானந்தன் ஐயா, கவிதை எழுதிய தாளின் மேற்பகுதி இது)

# கண்ணீர்ப் பூக்கள்



அமரர்
அந்தோனிப்பிள்ளை
செல்வராசா
(றோக்கையா)
(முன்னாள் பொது
முகாமையாளர்,
யாழ்.ப.தெ.வ.அ.கூ.சங்கம்)

பாசையூர் பதிதனில் பவனி வந்த செல்வனே ராசா
பாவிகள் நாம் பரிதவிக்க சென்றதெங்கே ராசா
தொண்ணூறில் எம்முடன் இணைந்தவரே
ஆயிரம் ஆயிரம் அறிவுரைகள் கூறி ஆறுதல் தந்தீரே செல்வா
பதினாறு வருடங்கள் பாங்குடன் பழகி பண்புடன்
பணி புரிந்தீரே பண்பாளனே செல்வா
பரிதவிக்க விட்டு சென்றதெங்கே செல்வனே செல்வ ராசாவே!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், அயலவருக்கும் எமது கண்ணீர் கலந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

யாழ்.ப.தே.வ.அ.கூ.சங்கம். பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.

(இ/551981)

# கண்ணீர் அஞ்சலி



23.03.2008 அன்று கலமான எமது சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளரும் சிறந்த சமூக சேவையாளருமான

உயர்திரு.
அந்தோனிப்பிள்ளை
செல்வராசா
(றோக்கையா)

15A, ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அவர்களுக்கு எங்கள் இதயத்து அஞ்சலிகள்

உங்கள் மறைவு உண்மையாகிப் போனாலும்
எங்கள் மனசு ஊமையாகிப் போகாது
நன்றே அன்று நமக்கழித்த சேவைகளை
நன்றி என்ற வார்த்தைகளால் நிரப்பிட முடியாது
சென்று வருக செம்மலே உங்கள்
சீரிய பணி எண்ணிச் சிரம் தாழ்த்துகின்றோம்
பொய்யா உலகம் சென்றவரே
ஐயா எங்கள் அஞ்சலிகள் உங்களுக்கு.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ப.தெ.வ.அ.கூ.சங்கம், கோண்டாவில். பணிப்பாளர்கள்,பணியாளர்கள்,

(இ/551981)

## உலக நாடக தின விழா நாளை பல்கலையில்

யாழ்ப்பாணம்,மார்ச்26

யாழ்.பல்கலைக்கழக வெறுவெளி அரங்கக் குழுவினரால் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10மணிக்கு கைலாசபதி கலையரங்கில் உலக நாடகதின விழா நடத்தப்படவுள்ளது.

வெறுவெளி அரங்கக் குழுத் தலைவர் த.குமரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும் சிறப்பு விருந்தினர்களாக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா, நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி ஆகியோரும் கலந்துகொள்வர். (203)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள், PIRIMA பேட்டுக் குஞ்சுகள் 27.03.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு.
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப்புளியடி
* P.ரவி - சாவகச்சேரி
* உடுவில், நல்லூர், தெல்லிப்பழை, கோப்பாய் ஆகிய கால்நடைச் சங்கங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(72300)

## தொடர்புகொள்ள வேண்டுகின்றோம்

மட்டக்களப்பைச் சேர்ந்த திரு.அமரசிங்க ஜோண் பற்றிஸ் (கிருபைதாஸ்) அவர்களை பிரான்ஸில் உள்ள அவரது மகன் ஜோ.ஜடன் தேடுகின்றார்.

திரு.அ.ஜோண் பற்றிஸ் அவர்களை அல்லது அவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்களை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ள வேண்டுகின்றோம்.

0033 614710961
0033 650393611
0033 130388416

தகவல்:
J.ஜடன் (மகன் - பிரான்ஸ்).

(இ/551978)

## நேற்று முன்தினம் இருவர் சரண்

தமக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்து இருவர் நேற்று முன்தினம் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரண் அடைந்துள்ளனர்.

ஆவரங்காலைச் சேர்ந்த 20 வயதான இளைஞர் ஒருவரும் சாவகச்சேரியைச் சேர்ந்த 28 வயதான குடும்பஸ்தர் ஒருவருமே உயிர்த் தஞ்சம் கோரி சரண்அடைந் தவர்கள் ஆவார். (அ-2)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## பொன்னம்பலம் பத்மராசா

தோற்றம்: 12.12.1950 மறைவு: 25.02.2008

காற்றோடு நீ கலந்து மாதம் ஒன்று ஆனதுவோ
கண்ணீரில் கரைந்து நாம் மண்ணில் புலம்புகின்றோம்
எம்மோடு உறவாட மீண்டும் நீ வாராயோ.

ஸ்ரீ கணேசா சனசமூக நிலைய இளைஞர்கள்,
நெட்டிலிப்பாய், கோண்டாவில்.

(72430)

# ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 * 02 * 1947



உதிர்வு 26 * 03 * 1999

## திருமதி அனற்றா இமாக்குலேற்றா இம்மனுவேல்

கல்வியில் உயரவைத்தாய்
கவலைகள் மறக்க வைத்தாய்
நல்வழி காட்டி நின்றாய்
நாம் வாழ வழி சமைத்தாய்

உயிரோடு கலந்து நின்றாய்
உணர்வாக எமில் மலர்ந்தாய்
கனவிலும் நிறைந்து நின்றாய்
இனியன கூறி நின்றாய்.

எமதன்புத் தெய்வமே!
ஒன்றாக நாமிருந்த காலமிது காலமாகி
ஒன்பது ஆண்டுகளும் ஓடி மறைந்ததுவோ!


என்றும் உம் நினைவுடன்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சில்லாலை வடக்கு.
பண்டத்தரிப்பு. (72442)

# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை கந்தையா

( நிர்வாகப் பொறுப்பாளர், வியாபாரிமூலை, இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், உரிமையாளர், கண்டி S.K. கொம்பனி ஸ்தாபனம் )



வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கந்தையா நேற்று (25.03.2008) செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான உபாத்தியாயர் கணபதிப்பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி, பாக்கியம், சிவகுரு ஆகியோரின் மைத்துனரும் சச்சிதானந்தம் (ஓய்வுபெற்ற- ஆசிரியர் பயிற்சி நிலைய முகாமையாளர்), இராமச்சந்திரன் (S.K.கொம்பனி- கண்டி), கலாவதிதேவி, ஜெயபாலன் (ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர்), ஸ்ரீஸ்கந்தராஜன் (S.K. கொம்பனி- கண்டி), மனோகரன் (கனடா), ஜெகதீசன் (Dr. முருகானந்தன் டிஸ்பென்சரி, பருத்தித்துறை), மணிமாதேவி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பங்கையற்செல்வி (கொழும்பு), சாந்தகுமாரி (கண்டி), குகநேசன் (ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி), சிவரத்தினசோதி, பூங்கோதை (கொழும்பு), ஜெயலட்சுமிதேவி (கனடா), சாந்தகௌரி (ஆங்கில ஆசிரியை, வட.இந்து மகளிர் கல்லூரி), Dr. மு.க.முருகானந்தன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு மாமனும் பாரதி (கொழும்பு), சேயோன் (கனடா), விஜிதா (லண்டன்), சுஜிதா (கண்டி), ஸ்ரீஸ்கந்தன் (இந்தியா), காலஞ்சென்ற குமரேசன் மற்றும் சுகந்தி, ரகுராம் (இந்தியா), மயூரேசன், பிரதீபன் (யாழ்.பல்கலைக்கழகம்), சுதர்ஸன் (கொழும்பு- பல்கலைக் கழகம்), அமிதா (கொழும்பு), ஹசிதா (கனடா), ஹசிலா (கனடா), கீர்த்தனா, ஸ்ரீராம், ரம்மியன் (லண்டன்), எழில் (ரஷ்யா), பாலச்சந்திரன் (புள்ளி விபரவியலாளர்- கொழும்பு), நகுலன் (லண்டன்), கருணாகரன் (பொறியியலாளர்- கண்டி), இந்திரா (இந்தியா), சிறீதரன் (அஜீத் ஸ்ரோர்ஸ்), காமேஸ்வரி (மின்சார சபை- இந்தியா), சிவரஞ்ஜினி (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பேரனும் கிருஷன் (கொழும்பு), விபுஷன் (கொழும்பு), ஹர்ஷன் (லண்டன்), நிரோஷன் (லண்டன்), யதுர்ஷன் (கண்டி), கல்பனா (இந்தியா), நிஷாந்தினி (இந்தியா), அஜீத், சில்பா, ஷாலினி (இந்தியா) ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2008) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் சுப்பர் மடம் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

"அன்னை இல்லம்", வியாபாரிமூலை, பருத்தித்துறை. (72437) தகவல்: பிள்ளைகள்.

# நுண்கலைப் பீட மாணவர் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தில் கல்வி பயிலும் சங்கீதத்துறை மாணவர்கள் நேற்று ஆர்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

இராமநாதன் கல்லூரியில் இயங்கும் தமது பிரிவை இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் புதிய கட்டடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கோரியே இந்த ஆர்ப்பாட்டம் நடத் தப்பட்டது.

இராமநாதன் கல்லூரியில் இயங்கும் தமது பிரிவில் மாணவர்கள் பெரும் அசௌகரியங் களை எதிர்நோக்குகின்றனர் என்றும் -

மழை காரணமாக ஏற்படும் ஒழுக்கால் மாணவர்கள் கல்வியைத் தொடரமுடியாத நிலை இருப்பதாகவும் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் ஈடுபட்டனர்.

தமது பிரிவை நுண்கலைப் பீடக் கட்டடத்திற்கு மாற்றுவது தொடர்பாக இணக்க நிலை ஏற்படாவிட்டால் தொடர்ந்தும் போராட்டம் நடத்தப் போவதாக மாணவர்கள் அறிவித்துள்ளனர். (அ-1)




## கண்ணீர் அஞ்சலி



உரும்பிராயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்பாள் ஆலய
பரிபாலன சபை உறுப்பினரும்
கிராமசேவையாளருமான

### மகேந்திரம் தயாபரன்

அவர்களது திடீர் மரணத்தையிட்டு மனம் வருந்துவதுடன் அன்னாரின் பிரிவால் துயறுரும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பர்வதவர்த்தனி அம்மன் அருளவேண்டுமென இறைச்சுகிறோம்.

பர்வதவர்த்தனி அம்மன் ஆலயம், உரும்பிராய். (C) பரிபாலன சபையினர்

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா இராசா(முகமாலை)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் முகமாலையை வதிவிடமாகவும் தற்காலிகமாக புலோலியில் வசித்து வருபவருமாகிய கந்தையா இராசா நேற்று(25.03.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் குகதாஸ்(U.K), மோகனதாஸ்(U.K), மாலினி, யோகதாஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்சினி, சசிகலா, தர்மகுலசிங்கம்(தம்பு - கச்சேரி, யாழ்ப்பாணம்), அகலியா ஆகியோரின் அன்பு மாமனாரும் லட்சிகா, ஜாதவன், கோபிநாத், தர்நீதன் கரிகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ங்கச்சியம்மா, செல்லக்கிளி, சுந்தரலிங்கம், நாகேஸ்வரி, கனகபூஷணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.03.2008) புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வடுவாவத்தை, புலோலி தெற்கு, புலோலியில் இடம்பெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மகுலசிங்கம்
(தம்பு-மருமகன் )
(D)

### முருகேசு துரைராசா



யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாகவும் கொட்டடி, சிவன் பண்ணை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு துரைராசா அவர்கள் நேற்று (25.03.2008) செவ்வாய்க் கிழமை சுவிற்ஸர்லாந்தில் இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கோணேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், பொன்னம்மா, சின்னம்மா மற்றும் சண்முகம், காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் சுப்பிரமணியம், மகேஸ்வரி அகியோரின் மைத்துனரும் மோகனறாஜ்(சுவிஸ்),கிரிராஜா(சுவிஸ்), லதா(ஜேர்மன்), இந்து (சுவிஸ்), உதயறாஜ்(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும். சிவதாஸ்(ஜேர்மன்),ஜெயதாஸ்(கனடா), ஜெயவதனி (லண்டன்), சசிவதனி(கனடா), ஆகியோரின் சித்தப்பாவும். வள்ளிநாயகி (சுவிஸ்), வசந்தராணி(சுவிஸ்), சுரேந்திரன் (ஜேர்மன்), சிவகுமார்(சுவிஸ்), பேரின்பமணி(ஜேர்மன்), திலகரூபி(கனடா), சிவகாந்தறூபன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனரும். விதுரன்(ஜேர்மன்), வின்சி(ஜேர்மன்), விதுஷன் (சுவிஸ்), சிந்து (சுவிஸ்), அடச்றாஜ்(சுவிஸ்), பிரியங்கா, சியானுகா, அபிக்கா (ஜேர்மன்), ஸ்ரீபன், பிரதீபன், நவீன், பஜீவன், அஞ்சலா (கனடா), சாம்பவி, சாகித்தியா(கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அனாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2008) வியாழக்கிழமை 4 மணியளவில் சுவிற்ஸர்லாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.மகேஸ்வரி
(மைத்துனி)

*இல.95, சிவன்பண்ணை வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.* (72447)

# குடாநாட்டில் தொடர்மழையால் 1,200 ஏக்கர் பயிர்ச்செய்கை பாதிப்பு

## முழுமையான கணக்கெடுப்பு இன்னும் செய்யப்படவில்லை

யாழ்ப்பாணம்,மார்ச்26

கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்த மழை காரணமாக சாவகச்சேரி உடுவில் காரைநகர், ஊர்காவற்றுறை ஆகிய பிரிவுகளில் 1285.19 ஏக்கர் காணியில் மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் தெரித்துள்ளார்.

இது தொடர்பாக அரச அதிபர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சாவகச்சேரி, உடுவில், காரைநகர்,ஊர்காவற்றுறை ஆகிய பிரிவுகளில்1285.19 ஏக்கர் பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கிடைத்ததகவலின் படி கோப்பாய், உடுவில்,ஊர்காவற்றுறை ஆகிய பிரிவுகளில் 652 குடும்பங்களின் 5 வீடுகள் முழுமையாகவும் 487 வீடுகள் பகுதியளவிலும் பாதிக்கப்பட்டுள்ளன.

மேற்படிவீடுகள், பயிர்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான நீதி ஒதுக்கீட்டை பெற்றுக்கொள்வதற்றகாக விரிவான விவரங்கள் மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சிற்கு அறிவிக்கப்படுகின்றன.

மழையினால் உண்டான சேதவிவரங்களை உடன் அனுப்பிவைக்குமாறு பிரதேச செயலர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். இதுவரை பாதிப்பு விவரங்களை அனுப்பிவைக்காத பிரிவுகளின் பிரதேச செயலர்கள் உதவி அரசாங்க அதிபர்களை தமது பிரிவு பாதிப்பு விவரங்களை உடனடியாக யாழ். மாவட்ட செயலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (அ-1)

# ‘சி-4’ ரக வெடிபொருள்கள் முகத்துவாரம் வீட்டில் மீட்பு

கொழும்பு, மார்ச்.26

கொழும்பு, முகத்துவாரம், அளுத்மாவத்தையில் வீடு ஒன்றில் இருந்து நான்கு கிலோ நிறையுடைய ‘சி - 4’ ரக வெடிபொருள்களையும், பத்து டெட்டனேட்டர்களையும், நேரக் கணிப்புக் கருவி நான்கையும் பொலிஸார் மீட்டுள்ளனர் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இந்தப் பொருட்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதியில் சந்தேகத்துக்கு இடமான சிலரின் நடமாட்டம் உள்ளது என அயலவர்கள் கொடுத்த தகவலை அடுத்தே பொலிஸ் அணி ஒன்று இவ்வீட்டை சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தி இந்த வெடிபொருட்களைக் கண்டுபிடித்தது எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கைதுசெய்யப்பட்டவர்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர் என்று பொலிஸார் என்று தெரிவித்தனர். (சி)

# புலிகளின் 10 சடலங்கள் ஒப்படைப்பு

கொழும்பு, மார்ச்.26

மன்னார் மற்றும் மணலாறுப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்தவர்கள் எனக் கருதப்படும் விடுதலைப் புலிகள் பத்துப் பேரின் சடலங்களை நேற்றுக்காலை இராணுவத்தினர் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாக வன்னியில் புலிகளிடம் ஒப்படைத்தனர் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினால் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த இச்சடலங்களை கடந்த ஞாயிற்றுக் கிழமை வைத்தியசாலை பிரேத அறைக்குச் சென்று நேரில் பார்வையிட்ட மன்னார் நீதிவான் ரி.பிரபாகரன் அவற்றைப் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உரிய தரப்புகளிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டிருந்தார். (சி)

## கண்ணீர் அஞ்சலி



### மகேந்திரன் தயாபரன்

(நல்லூர் பிரதேசசெயலக கிராம அலுவலர்J/118) )

இன்முகம் போல வாழ்வு! இனியவே பேசும் மாண்பு !
என்றுமே பணியில் நாட்டம் ஏற்றமுறு கடமை நேசம்!
சென்றதே இன்று இந்தக் காசினிதனைப் பிரிந்து!
கன்றதைப் பிரிந்த தாய்போல் கவலையாற் கனக்கும் எங்கள்
துன்புறும் உணர்வுதனை சமர்ப்பணமாகத் தந்தோம்
என்றுமே இன்பம் நல்கும் ஈசனார் அடிகள் தன்னில்
ஒன்றித்து உங்கள் ஆத்மா சாந்தியே பெறுக நன்றே!

*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு உங்கள் உறவுகளின் துயரில் கலந்து எங்கள் ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்*

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்
(72449)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் வீதி
பராமரிப்பு ஊழியராக
கடமையாற்றும்

### கதிர்காமலிங்கம்

அவர்கள் இறைபதம்
எய்தியதையிட்டு எமது ஆழ்ந்த
கவலையைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

வீதி அ.அ.சபை, யாழ்ப்பாணம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்.
(72446)

## மரண அறிவித்தல்



### சிவகுரு சீவரத்தினம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும் கிழக்கு வளவு, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சீவரத்தினம் 23.03.2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஜெயலக்சுமியின் அன்புக் கணவரும் புத்தூரைச் சேர்ந்த சிவகுரு - சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும் மல்லாகத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் - பொன்னுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற நாகம்மா, நடராசா (கனடா), சின்னம்மா, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற குணராசசிங்கம்(பெரியண்ணை) காலஞ்சென்ற செல்வலக்சுமி, காலஞ்சென்ற கந்தசாமி, வவுஸ்திராதேவி, காலஞ்சென்ற காசிப்பிள்ளை, ஆகியோரின் மைத்துனரும் மங்களேஸ்வரி(டென்மார்க்), தேவகுமார் (கனடா), இராசகுமார்(சுவிஸ்), சதரூபி ஆகியோரின் தகப்பனாரும் பத்மநாதன், சுகிர்தராணி, ஜீவபூரணி, பேரானந்தமூர்த்தி (மதுர் டீசல் எஞ்சினியேர்ஸ், சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும் அபிரா, ஜெனீஷா, மதுஷ், நிகேதன், மதுரிகா ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.03.2007) வியாழக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

*கிழக்கு வளவு,*
*மல்லாகம்.* (E)

# தமிழர்களுக்குத் தனிநாடு உருவாகுவதை இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது!

## இஸ்ரேலில் வைத்து இலங்கைப் பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 26

இலங்கைத் தமிழர்களுக்கென தனியான நாடொன்று உருவாவதற்கு இந்தியா ஒருபோதும் அனுமதிக்காதென இலங்கை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க இஸ்ரேலில் வைத்துக் கருத்து தெரிவித்துள்ளார்.

ஜெரூஸலத்தில் இஸ்ரேலியர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத் தமிழர்களுக்கு என தனி நாடொன்று அமைவது இந்தியாவில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துமென்பதால் புதுடில்லி அதற்கு அனுமதிக்காதென்பதை மனதில் கொள்ள வேண்டுமென பிரதமர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு குறித்து இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளது எனமேலும் குறிப்பிட்டுள்ள அவர், விடுதலைப் புலிகளின் தலைவர் இந்தியாவின் சில பகுதிகளை உள்ளடக்கிய தமிழர் தாயகமொன்றை உருவாக்க முயல்கிறார் எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

இலங்கையின் மூன்று தசாப்தகால மோதலுக்கு அரசியல் தீர்வொன்றை காண்பது குறித்து இலங்கை அரசு உறுதியாகவுள்ளது. ஆனால் இராணுவத் தீர்வை அரசு நாடவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்று ரீதியாகத் தனிநாடாகவே விளங்கும் இலங்கையைப் பிரிப்பதற்கான சாத்தியக்கூறுகளை நிராகரித்துள்ள பிரதமர், அரசியல், பொருளாதார ரீதியாகவும் இது சாத்தியமற்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை பேச்சுக்கான கதவுகள் எப்போதும் திறந்திருக்கின்றன என்று வலியுறுத்தியுள்ள பிரதமர் விக்கிரமநாயக்க, எனினும் விடுதலைப் புலிகளின் இரத்த வெறிபிடித்த தலைவர் உள்ள வரை மாற்றத்திற்கான வாய்ப்பில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் மோதல் இடம்பெறும் பகுதிகளின் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை அங்கு விவரித்த பிரதமர், சிறுபான்மையினத்தவர்களை தேசிய நீரோட்டத்திற்குள் கொண்டு வருவதற்காக அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் குறித்தும் அங்கு குறிப்பிட்டுள்ள இலங்கை பிரதமர், அது இந்திய மாதிரியை அடிப்படையாகக் கொண்டது என்றும் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத் தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதென இலங்கை அரசு தீர்மானித்துள்ளதை இந்தியா உட்பட பல நாடுகள் வரவேற்றுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

வேறு எந்த நாட்டையும் விட இந்தியா எமது நெருக்கடி நிலைமை குறித்து நன்கு அறிந்துள்ளது. மாகாண சபைகள் உருவா வதற்கு காரணமான அரசமைப்பின் திருத் தம் 1987இல் கைச்சாத்திடப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தத்தால் உருவானது என்றும் அவர் சுட்டினார்.



விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடுவதற்கு சர்வதேச சமூகத்தின் உதவியை அங்கு கோரியுள்ள பிரதமர் விக்கிரமநாயக்க, விடுதலைப் புலிகள் அமைப்பு எல்லை கடந்த நெருக்கடியாக மாறியுள்ளது. இதனை எதிர்கொள்ள சர்வதேச ஒருங்கிணைப்பு அவசியம் என்றும் தெரிவித்தார். (அ-உ)

## படையினர் சூட்டில் சிப்பாய் உயிரிழப்பு

அநுராதபுரம் பகுதியில் உள்ள இராணுவ இடைமுகாம் ஒன்றில் நேற்று அதிகாலை 2மணியளவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ முகாமின் பாதுகாப்பு வளாகத்தினுள் சந்தேகத்திற்கு இடமாக ஒருவர் நடமாடியமையை அப்பகுதியில் காவலில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் அவதானித்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும், இதனையடுத்து நேற்றுக்காலை இராணுவத்தினர் அப்பகுதியில் மேற்கொண்ட தேடுதலின்போது அதே முகாமில் கடமையாற்றும் இச்சிப்பாயின் சடலம் அங்கிருந்து மீட்கப்பட்டது என்றும் - படைத்தரப்பில் கூறப்பட்டது. (சி)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் எமது கட்சி வெற்றிபெற்றுள்ளது. அதன் அடிப்படையில் கூடுதல் செல்வாக்குப் பெற்ற நிலையில் உள்ள எமது கட்சியைச் சேர்ந்த ஒருவரே முதலமைச்சர் பதவிக்கான முதன்மை வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும். அதற்கு அரசு இணக்காது விட்டால் நாம் தனித்துப் போட்டியிடுவோம் என்றார் அவர் (அ-1)

## முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் அந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்பட வில்லை தோல்வியில் முடிந் தது என்று முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசன் அலி தெரிவித்ததார்.

தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடும் என்றும் அவர் கூறினார். (அ-1)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்வதற்கு அனுமதிச் சீட்டினைப் பெற்றுக்கொண்டவர்கள். பெற்றுக்கொண்ட திகதிக்கு மறுநாள் தமது பயணத்தினை மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

வடமாகாண பொதுநிர்வாக அமைச்சினால் நியமனம் செய்யப்பட்ட 101 முகாமைத்துவ உதவியாளர்கள் திருகோணமலை செல்வதற்கு இம்மாதம் 29 ஆம் திகதிக்கு பிரயாண ஒழுங்கு செய்யப்பட் டுள்ளது. அவர்கள் இன்று 26ஆம் திகதி மாவட்டச் செயலகம் புனர்வாழ்வு புனரமைப்பு பகுதியில் விவரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (அ-1)

## உணவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை செய்யப்பட்ட பல தமிழ் மக்கள் காணாமல்போயுள்ளனர்.

இது தமிழ்மக்களுக்குப் பெரும் உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. சிங்கள அரசு சில சோதனைச் சாவடிகளை மூடுவதன் மூலம் தமிழ் மக்களை வெளி யுலகத்தில் இருந்து அன்னியப்படுத்தியும் வருகின்றது. கடந்த 18 மாதங்களாக யாழ். குடாநாட்டில் இந்நிலைமை நீடிக்கின்றது.

யாழ். குடாநாட்டின் இந்நிலமை அங்கு உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டையும் ஏற்படுத்தி உள்ளது. யாழ். குடாநாடு வெளி யுலகத்தில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ள போதும் அது தொடர்பாக யாரும் எழுதுவது கிடையாது. சிங்கள அரசின் கொலைக்குழுக்களின் அச்சுறுத்தல்கள் காரணமாக யாழ்.குடாநாட்டில் இருப்பவர்களாலும் பேச முடிவதில்லை.

தமிழ் மக்கள் மீதான முதலாவது தடையாக சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், மூன்றாவது தடையாக வெளி உலகத்துடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது தடையாக உணவு, மருந்து, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருள்கள் மீதான கட்டுப் பாடுகள் உள்ளன.

2006ஆம் ஆண்டில் இருந்து தமிழ்ப் பகுதிகளுக்கான சிமெந்து மற்றும் எரி பொருள்களுக்கான கட்டுப்பாடுகள் நடை முறையில் உள்ளன. இத்தடைகளால் ஆழிப் பேரலை அனர்த்த உதவிகளை வழங்கி வந்த பல அரச சார்பற்ற நிறுவனங்களும் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன.

இக்கட்டுப்பாடுகளை மூன்றாம் ஈழப் போரில் இருந்து வன்னி எதிர்கொண்டு வருகின்றது.

இத்தடைகள் சிறுவர்களை அதிகம் பாதித்து வருகின்றன. போசாக்குக் குறைவு, சிறார் தொற்று நோய்கள் என்பன அதிகரித்துள்ளன. அதனை போர் நிறுத்தக் காலத்தில் பயணம் செய்தவர்கள் அவதானித்திருந்தனர்.

ஒவ்வொரு வாரமும் இந்நிலமை மோசமடைந்து வருகின்றது. கிளிநொச்சி, முல் லைத்தீவு மாவட்ட செயலகங்களும், ஐக் கிய நாடுகள் சபையின் உலக உணவு நிறு வனமும், அனைத்துலக சமூகமும் இதனை சிங்கள அரசிடம் எடுத்துச் சென்ற போதும் எந்தப் பலனும் ஏற்படவில்லை.

வன்னியின் (விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின்) மக்கள் தொகை 4 லட்சத்து 60 ஆயிரம் ஆகும். கிளிநொச்சியில் இரண்டு லட்சம் பேரும், முல்லைத்தீவில் இரண்டு லட்சம் பேரும், வவுனியாவில் 30ஆயிரம் பேரும், மன்னா ரில் 30ஆயிரம் பேரும் வசிக்கின்றனர் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளது குறிப்பாகத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் உள்ள நெருக்கடிகள் தொடர்பாக சிரத்தை கொண்டுள்ளது.

இலங்கையின் நெருக்கடிக்குச் சமாதானத் தீர்வைக் காண்பதற்கான ஆதரவை சர்வதேச சமூகம் அதிகரிக்க வேண்டும்.

எனினும் பிரச்சினைக்கு என்ன தீர்வைக் காணவேண்டும் என்பதை சர்வதேச சமூகம் பரிந்துரைக்கக்கூடாது. அது இலங்கை மக்களைப் பொறுத்த விடயம். இதுவே தென்னாபிரிக்க மக்களினதும் அரசினதும் நிலைப்பாடு.

விடுதலைப் புலிகள் அமைப்பு பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டமை போலவே தென்னாபிரிக்காவிலும் நிறவெறிக்கு எதிரான விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் ஈடுபட்ட வேளை அப்போதைய தென்னாபிரிக்க அரசு எம்மையும் பயங்கரவாத அமைப்பென வர்ணித்தது. எனினும் நாம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. நாங்கள் அதற்கெதிராகப் போராடினோம்.

சுதந்திரமான அரசியல் செயற்பாடு

சுதந்திரமான அரசியல் செயற்பாட்டிற்கான - பொருத்தமான - சூழ்நிலைகளை நாங்கள் உருவாக்கினோம். இது மிகவும் முக்கியமான விடயம். இதன்மூலம் மக்கள் வெளிப்படையாக - ஒடுக்குமுறை சட்டங்கள் குறித்து அஞ்சாமல் - விவாதங்களில் பங்கு கொள்ள முடிந்தது.

தென்னாபிரிக்காவில் பேச்சு மூலமான தீர்வை காண்பதற்கு அவசியமான சூழலை உருவாக்குவதற்கு எம்மீதான தடையை நீக்கி, அரசியல் கைதிகளை விடுவிக்க வேண்டுமென்றோம். இதுவே எமது போராட்டத்தில் நாங்கள் எதிர்கொண்ட தடை.

இதை எதிர்கொள்வதற்காக மக்களையும், சர்வதேச சமூகத்தையும் ஒன்று திரட்டி தடைகளை அகற்ற வேண்டியிருந்தது. இது தமிழர்களின் போராட்டத்துக்கும் பொருந்தும்.''

- இப்படி அவர் குறிப்பிட்டார். (அ-உ)

*(மற்றொரு செய்தி 9ஆம் பக்கத்தில்)*

## போர் உக்கிரமடைவதால்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டு மனிதக் கடத்தல்களைப் பதிவு செய்த நாடுகள் பட்டியலில் உள்ளன. எனினும் போர் மீண்டும் இலங்கையில் உக்கிரமடைந்துள்ளதால் மனிதக் கடத்தல்கள் வேகமாக அதிகரிக்க வாய்ப்பிருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான மையம் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி சிறிலங்கா அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் போர் உக்கிரமடைந்து வருவதால் கடந்த ஏப்ரல் 2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் 188,000 பொதுமக்கள் கட்டாய இடப்பெயர்வுக்கு உள்ளாகியுள்ளனர்.

இன்றும் பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் தற்காலிக அகதி முகாம்கள் மற்றும் தற்காலிக கொட்டகைகள் குடிசைகளில் நிரந்தரமாக நீண்டகாலம் தங்கியிருப்பது டன் மிக மோசமான துன்பங்களுக்கும் முகம் கொடுத்து வருக்கின்றனர்.

தற்காலிக முகாம்களை, நிரந்தரமான வீடுகள் போன்று நீண்டகாலம் தங்குவ தற்கு அகதிகளுக்கு வழங்கப்படும் போது ஒரு வீட்டில் வாழ்கின்ற சுமுகமான சூழ் நிலையை பிள்ளைகள் இழந்து விடுகின்ற னர். சிறுவர்களுக்கு கிடைக்கக்கூடிய அன்பும் பரிவும் கவனிப்பும் நிரந்தரமாக கிடைக்காமல் போவதுடன், அவர்கள் மீதான துஷ்பிரயோகமும் தவறான குற்றச்செயல்களும் நிகழ்வதற்கு வாய்ப்புக்கள் உருவாகி விடுகின்றன.

இத்தகைய சிறுவர்களும் இளையவர்களும், பல்வேறு துஷ்பிரயோகங்கள் மற்றும் துன்பங்களும் உள்ளாவதுடன், இவர்களைக் களவாக வெளிநாடுகளுக்கு கடத் திச் செல்வதற்கான சூழ்நிலைகளும் அதிகரிக்க வாய்ப்பு உருவாகிறது. சிறிலங்கா வைப் பொறுத்தவரை, வறுமை, இயற்கை அழிவுகள், தொழில் இன்மை, பாலியல் தொழில் வாய்ப்புக்கள் போன்றன, வெளிநாட்டு மனிதக் கடத்தல்களுக்கான பிரதான காரணங்களாக இருக்கின்ற போதிலும், போர் உக்கிரமடைந்து செல்கின்ற சூழல், இத்தகைய மனிதக் கடத்தல்களை மேலும் அதிகரிக்க ஏதுவாக அமையும் - என்று தமது பேட்டியில் தெரிவித்தார் (அ-1)

## மரண அறிவித்தல்

### கந்தையா தளையசிங்கம்

(முன்னைய யாழ். தியேட்டர் உரிமையாளர்)

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப் பிடமாகவும் கொண்ட கந்தையா தளையசிங்கம் நேற்று (25.03.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - தையல்நாயகியின் அன்பு மகனும் கமலா செல்வரதியின் அன்புக் கணவரும், யாழினி (குவைத்), ராஜ்மோகன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கேதவ ராஜன், சுபோதினி ஆகியோரின் அன்பு மாமனாரும், பமிலா, சௌமியா, யதுசன், மதுசா, நிதுசன் ஆகியோரின் பேரனும், காலஞ் சென்ற இராசம்மா, சுப்பையா மற்றும் இரத்தினாத்தா (வவுனியா), காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் மகேஸ்வரி (புன்னாலைக்கட்டுவன்), செல்லத்துரை (கொழும்பு), குலசிங்கம் (புன்னாலைக்கட்டுவன்), லோகறாஜா (மன்னார்) ஆகியோரின் சகோதரியும், விமலா, அமிர்தன், ராசகாரியர் ஆகி யோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.03.2008) புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

*மூத்ததம்பி லேன்,*
*மானிப்பாய்.*
யாழினி :- 009655610386
மோகன் :- 0033160312109
இந்திரன் :- 0094774447677

தகவல்:
சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
பெறாமக்கள்

**SPECIAL ENGLISH CLASS**
**(100 Hours Intensive Course)**
**London English**
100 மணித்தியாலங்களில் ஆங்கிலம் - பேச - எழுத - வாசிக்க நவீனமுறையில் இலகுவாக கற்கலாம்.
* தினசரி வகுப்பு * சனி - ஞாயிறு வகுப்பு
* ஆங்கில மொழியில் கல்வி கற்போர் - வெளிநாடு செல்வோர் - உத்தியோகம் பார்ப்போர் கற்கலாம்.
* அச்சடித்த பாடங்கள் * வீடியோ பாடங்கள்
* IELTS கல்வி
*Lectures By:* Mr. A.Rajagopalan, Mr.B.Ruban
ஆரம்பம் 28.03.2008
**Jaffna Technical Institute**
45, Clock Tower Road, Jaffna
Phone : 222 3127

100% Practical Education
பல புதிய விடயங்களுடன்
**Dip. In Hardware Engineering**
சகல வகையான கணனிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான தொழில்சார் கற்கை நெறி
பதிவுகள் 28.03.08 இற்கு முன்
**Softview Computer College**
55, Arasady Road, Jaffna.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.